விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 13 வெள்ளிக்கிழமை (26.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

தற்கொலைத் தாக்குதலில்

## உயிரிழந்தோர் 253 பேர்தான்!

அரச அறிவிப்பு தவறு சுகாதார பணிப்பாளர்

(கொழும்பு)

நாட்டில் உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 253 பேர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். 23☛

## குண்டுத் தாக்குதல் தொடர்பில் தேடப்படுபவர்களின் புகைப்படங்கள் பொலிஸாரால் வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் கடந்த 21ம் திகதி இடம்பெற்ற 8 தற்கொலை தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுடைய பெயரையும் புகைப்படத்தையும் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ளது. குறித்த நபர்களை அடையா 24☛



## இந்த வார இறுதிப் பகுதியில்

# புனிதத்தலங்கள் மீது மேலும் தாக்குதல்கள் நடத்தப்படலாம்!

## இலங்கைக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(கொழும்பு) இந்த வார இறுதிப் பகுதியில் மேலும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று இலங்கை அதிகாரிகளை எச்சரித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இந்த எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளது. பெரும்பாலும் புனிதத் தலங்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று இலங்கை அதிகாரிகளை எச்சரித்துள்ளது. (23-ம் பார்க்க...)

மீதேன் வாயு தாக்கியதில்

## வவுனியா நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நால்வர் பலி



(வவுனியா)

வவுனியா நகரசபையின் மாடு வெட்டும் கொல்களத்திலுள்ள கழிவு கிடங்கை துப்புரவு செய்த போது மீதேன் வாயு தாக்கியதில் குழிக்குள் விழுந்து நால்வர் மரணமடைந் 23☛

## இஸ்லாமியர்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்!

காணொளியை வெளியிட்டவருக்கு வவுனியா பொர்லிஸார் வலைவீச்சு

(குருமன்காடு)

ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களை நியாயப்படுத்தி சமூக வலைத்தளத்தில் காணொளியை வெளியிட்ட வவுனியா மற்றும் செட்டிகுள பிரதேச பள்ளிவாசல்களின் மௌலவி ஒருவரை கைது 02☛



## பாதுகாப்புச் செயலர் பதவியைத் துறந்தார்

ஹேமசிறி பெர்னாண்டோ

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ தனது பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக கடிதம் வழங்கியுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை 23☛



## சோதனை நடவடிக்கையால் அச்சமடைய வேண்டாம்!

பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்படும் பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதுமுள்ள தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் உள்ளிட்ட வணக்க ஸ்தலங்களுக்கு பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் போதியளவு பாதுகாப்பை வழங்கியுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு புறநகர் பகுதியான புகோட நீதவான் நீதிமன்றுக்கு முன்பாக வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றது. 23☛

## நாடு முழுவதும் சுழற்சி முறையில் மீண்டும் மின்வெட்டு

(கொழும்பு)

நாடுமுழுவதும் பகல்வேளை சுழற்சிமுறையில் மீண்டும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மின்சாரசபை முன் அறிவித்தல் வழங்கியுள்ளது.

நாட்டில் உற்பத்தியாகும் மின்சாரத்தைவிட அதற்கான கேள்வி அதிகரித்துள்ளதால் மின்வழங்கல் முகாமைத்துவத்தை சீராக 23☛

## தற்கொலைத் தாக்குதல்; 15 சி.ஐ.டி குழுக்கள் தீவிர விசாரணையில்

இதுவரை 78 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு உட்பட நாட்டின் 8 இடங்களில் தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தி 359 பேரை கொலை செய்த சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி. பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் கீழ் 15 சி.ஐ.டி. சிறப்பு பொலிஸ் குழுக்கள் விசாரித்து வருவதாக 23☛

## 39 நாடுகளுக்கான விசா தற்காலிகமாக நிறுத்தம்

அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பாதுகாப்புக் காரணிகளைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படவிருந்த விசா வழங்கும் விசேட திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை, வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ விவகாரங்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் 23☛

தற்கொலைத் தாக்குதல் தொடர்பில்

## 139 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் 8 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய 139 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியர்கள்...

செய்ய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் நிலப்பரப்பை கோரி இஸ்லாமிய மக்கள் போரில் ஈடுபடவில்லை எனவும் பொறுமையின் எல்லை தாண்டியுள்ளதால், போராட்டம் நடத்தி இஸ்லாமியர்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என மௌலவி அந்த காணொளியில் கூறியிருந்தார்.

இந்த காணொளி தொடர்பாக பல தரப்பினர் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்பிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பை வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், செட்டிகுளம் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார்.

வவுனியா செட்டிகுளத்தை சேர்ந்த முனாஜித் என்ற மௌலவியே சமூக வலைத்தளத்தில் இந்த காணொளியை வெளியிட்டிருந்தார். 8 நிமிடங்கள் ஓடக்கூடிய காணொளி சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய மௌலவி பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபரை கைது செய்ய வவுனியா மற்றும் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, குறித்த மௌலவி தௌஹீத் ஜமாத் அமைப்பினை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ம-250)


## ஆசிரியர்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி நிலையத்துக்கு A/L 2021 பிரிவினர்களுக்கு கலை, வர்த்தகப் பாடங்களை கற்பிக்க கூடியவர்களும் A/L 2019, 2020 பிரிவினர்களுக்கு கலை, வர்த்தக பாடங்களில் மீட்டல் வகுப்புக்களை நடத்துவதற்கும் ஆசிரியர்கள் தேவை.

**குறிப்பு: தெல்லிப்பழை பகுதியை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.**


(சி-6215)

**தொடர்புகளுக்கு:**

**077 152 4252**


## பதற்றமான சூழ்நிலையால்

# திருகோணமலை நகரம் நேற்று வெறிச்சோடியது



(திருகோணமலை)

திருகோணமலையில் வங்கிகள் உள்ளிட்ட அரச தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டு ஊழியர்கள் மற்றும் இதர தேவை காரணமாக வெளியில் சென்ற பொதுமக்கள் என அனைவரும் வீடுகளை நோக்கி நேற்று சென்றதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பல இடங்களில் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்ற நிலையில் பொது இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களை அகற்றுமாறும் அவ்வாறு அகற்றப்படாத வாகனங்கள் சந்தேகத்தின் பேரில் பரிசோதிக்கவுள்ளதாகவும் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஆகவே தான் பொதுமக்கள் தமது சுய பாதுகாப்பை கருத்திற்கொண்டு இவ்வாறு நிறுவனங்களை மூடி விட்டு வீடுகளுக்குச் சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம-3)

# அரசியலமைப்பு பேரவை இன்றைய தினம் கூடவுள்ளது

(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவை இன்றைய தினம் கூடவுள்ளது. சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு இந்த ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புதிய பிரதம நீதியரசர் மற்றும் கணக்காய்வாளர் ஆகியோரின் நியமனங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

எவ்வாறிருப்பினும், குறித்த நியமனங்கள் தொடர்பில் அரசியலமைப்பு பேரவைக்கு இதுவரை பரிந்துரைகள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை அரசியலமைப்பு பேரவை மீண்டும் கூடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-3)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு.வா.லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வாசேஸ்பதிராஜா விக்கினேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8580)

**அதிபர், ஆசிரியர்கள், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்

கடந்த 25.03.2018 அன்று ஜேர்மனியில் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி சண்முகேஸ்வரி துரைராசா**



அகத்தின் அழகு முகத்தில்
தெரியும் ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்
அன்னையே உன்னைப்
போன்று அன்பு செய்ய யாரும்
இல்லை இவ்வுலகில்...

திருமதி சண்முகேஸ்வரி துரைராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்று (26.04.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டிக்கொள்கின்றோம். இதனை அன்புடன் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**238/2, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.** **இங்ஙனம் குடும்பத்தினர்**

(8557)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்



**திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை**

(B.Com, PGDE, Med, SLPS-I)

**அதிபர் – யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்**

இன்று மணிவிழாக் காணும் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் கல்விச் சேவையை பாராட்டி அவர்களின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றோம்.

(C-6210)


**கோட்டக் கல்விப் பணிப்பாளரும், அதிபர்களும் நல்லூர்க் கல்விக் கோட்டம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் காட்டுக்குள் ஐ.எஸ்.பயங்கரவாதிகள்

## முகாம்களை அதிரடிப் படையினர், பொலிஸார் சுற்றிவளைப்பு





(கொழும்பு)

**கொ**ழும்பு - கண்டி வீதியிலுள்ள காட்டுப் பகுதியில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த முகாம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நிட்டம்புவ, பஸ்யால காட்டுக்குள் தீவிரவாதிகளின் முகாம் ஒன்று உள்ளதாக பொலிஸார் சந்தேகம். வெளியிட்டுள்ளனர்.

அதற்கமைய நேற்றுமுன் தினம் இரவு விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் காட்டுக்குள் நுழைந்து விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பிற்கு முன்னர் அந்த பகுதி மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டுக்குள் 4 பேர் மறைந்திருப்பதாகவும், அவர்கள் தப்பிக்க முடியாதளவு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அந்தப் பகுதியில் முகாம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. எனினும் இது குறித்து பொலிஸார் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இந்த முகாம் குறித்த புகைப் படங்கள் தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (இ-7)

---

## கொழும்பில் குண்டுவெடிப்பு

### ஐந்து முஸ்லிம்கள் ஐந்து சந்தியில் கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முஸ்லிம்கள் ஐவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வைத்து நேற்றுக் காலை இவர்களைக் கைது செய்துள்ளனர்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சந்தேகத்திற்கிடமாக நின்ற காரணத்தால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலின் பின்னர், யாழ்ப்பாணத்தில் பொலிஸார் உட்பட இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-101)

---

## தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது விசாரணை

### மகிந்த அணி விடாப்பிடி



(கொழும்பு)

உள்ளூர் மற்றும் சர்வதேச தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம்சாட்டப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதும் முதலில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமென மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் இனியாவது நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். புலனாய்வுப் பிரிவினரை பலப்படுத்தும் வழிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு எதிர்க்கட்சி என்ற ரீதியில் முழுமையான ஆதரவை நாம் வழங்குவோம்.

தேசிய பாதுகாப்பை எந்நிலையிலாவது உறுதிப்படுத்தி மீண்டும் நாட்டில் அமைதி நிலை பேணப்பட வேண்டும். அவசர காலச் சட்டத்தை அரசாங்கம் தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்த முயற்சித்தால் அரசியல் ரீதியிலான பாரிய விளைவுகள் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## அமெரிக்காவின் உதவியுடன் உலகில் எந்தவொரு நாடும் தீவிரவாதத்தை வெற்றி கொள்ளவில்லை-திலும் அமுனுகம

(கொழும்பு)

இலங்கையில்தற்போது காணப்படுகின்ற தீவிரவாதச் செயற்பாடுகளை இல்லாதொழிக்க அரசாங்கம் அமெரிக்காவின் உதவியை நாடுவது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். அமெரிக்காவின் உதவியுடன் உலகில் எந்த நாடும் தீவிரவாதத்தை வெற்றி கொள்ளவில்லை. முதலில் எமது நாட்டு தேசிய பாதுகாப்பு துறையினை பலப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு இடம் பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கம் சர்வதேசத்திற்கு நிபந்தனைகளற்ற அழைப்பை விடுத்துள்ளது. இந்நிலைமையை கட்டுப்படுத்தவும், தீவிரவாதத்தை இல்லாதொழிக்கவும் அமெரிக்க இராணுவத்தின் உதவியை நாடுவது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். அமெரிக்காவின் உதவியுடன் எந்த நாடும் இதுவரையில் தீவிரவாதத்தை வெற்றிக் கொள்ளவில்லை. ஏமன், சிரியா, ஈராக், லிபியா, ஆகிய நாடுகளுக்கு நிகழ்ந்தவை இலங்கைக்கும் ஏற்படுமா? என்ற சந்தேகம் [illegible]



எனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலனாய்வுப் பிரிவினரது உதவிகளை தற்போது அரசாங்கம் நாட்டுக்காக பெற்றுக் கொள்ள வேண்டும். தேசிய பாதுகாப்பிற்காக புலனாய்வுப் பிரிவினருக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று மகாநாயக்கதேரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமையை ஜனாதிபதி கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆர்ச்சர் 'ஆச்சரியம்' பராக் 'பரவசம்'

## இறுதி ஓவரில் ராஜஸ்தான் திரில் வெற்றி


ராஜஸ்தான் அணிக்கு ஆச்சரிய வெற்றியை பெற்றுக் கொடுத்த ஆர்ச்சர்

ஆர்ச்சர் ஆச்சரியமூட்ட பராக் பரவசப்படுத்த கொல்கத்தாவுக்கு எதிரான பிரிமியர் தொடர் லீக் போட்டியில் ராஜஸ்தான் அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தினேஷ் கார்த்திக் அரைச்சதம் வீணானது.

இந்தியா வில், 12வது ஐ.பி. எல்., கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கொல் கத்தாவில்உள்ளஈடன்கார்டன் மைதா னத்தில் நடந்த லீக் போட்டியில் கொல் கத்தா, ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி யின் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

**அதிர்ச்சி ஆரம்பம்**

கொல்கத்தா அணிக்கு ஆரம்பத் திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. வருண் ஆரோன் வீசிய முதல் ஓவரின் 3வது பந்தில் கிறிஸ் லின் (0) போல் டானார். ஒஷேன் தோமஸ், ஆரோன் பந்தில் தலா ஒரு பவுண்டரி அடித்த சுப்மன் கில் (14) நிலைக்க வில்லை. ஸ்ரேயாஸ் கோபால் 'சுழலில்' நிதிஷ் ராணா (21) சிக்கினார். அடுத்து வந்த சுனில் நரைன், கோபால் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி தனது ஓட்டக் கணக்கை ஆரம்பித் தார்.

**கார்த்திக் நம்பிக்கை**

பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், கோபால் வீசிய 11வது ஓவரில் ஒரு சிக்சர், 'ஹட்ரிக்' பவுண்டரி விளாசினார். இந்த ஓவரின் கடைசி பந்தில் நரைன், தன்பங்கிற்கு ஒரு சிக்சர் பறக்கவிட்டார். ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய 12வது ஓவரின் முதல் பந்தை சிக்சருக்கு அனுப்பினார் கார்த்திக். இந்த ஓவரின் 3வது பந்தில் தேவையில்லாமல் 2வது ரன்னுக்கு ஓடிய நரைன் (11) 'ரன்-அவுட்' ஆனார். தொடர்ந்து அசத்திய கார்த்திக், ஆரோன் வீசிய 14வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விரட்டினார். உனத்கட் வீசிய 16ஆவது ஓவரில் ரசல், கார்த்திக் தலா ஒரு சிக்சர் விளாசினர். அபாரமாக ஆடிய கார்த்திக், ஐ.பி.எல்., அரங்கில் தனது 18 ஆவது அரைச் சதமடித்தார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ரசல் (14), ஒஷேன் தோமஸ் பந்தில் ஆட்டமிழந்தார். உனத் கட் வீசிய 18வது ஓவரின் முதல் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய கார்லஸ் பிராத் வைட் (5), 2ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். இந்த ஓவரில் கார்த்திக், தன்பங்கி ற்கு 2 பவுண்டரி அடித்தார். ஆர்ச்சர் வீசிய 19 ஆவது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்ட கார்த்திக், உனத் கட் வீசிய கடைசி ஓவரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி விளாசி னார்.

20 ஓவர்களில், கொல் கத்தா 6 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்கள் குவித்தது. கார்த்திக் (97), ரிங்கு சிங் (3) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

**'சுழல்' ஆதிக்கம்**

சவாலான இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு அஜின்கியா ரகானே, சஞ்சு சாம்சன் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. பிரசித் கிருஷ்ணா, ரசல் பந்தில் தலா ஒரு சிக்சர் அடித்தார் சாம்சன். மறுமுனையில் அசத்திய ரகானே, பிரித்வி ராஜ் வீசிய 5வது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி விளாசினார். முதல் விக்கெட்டுக்காக 53 ஓட் டங்கள் சேர்த்தபோது நரைன் 'சுழலில்' ரகானே (34) வெளி யேறினார். பியுஸ் சாவ்லா பந்தில் சாம்சன் (22) போல் டானார். நரைனிடம் அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (2) சரணடைந்தார். சாவ்லா 'சுழலில்' பென் ஸ்டோக்ஸ் (11), ஸ்ரூவேர்ட் பின்னி (11) ஆட்டமிழந்தனர்.

**ஆர்ச்சர் அபாரம்**

ராணா வீசிய 15வது ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்த ஸ்ரேயாஸ் கோபால் (18), பிரசித் கிருஷ்ணாவிடம் விக் கெட்டை பறிகொடுத்தார். பிரசித் வீசிய 18வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய ரியான் பராக் (47) நம பிக்கை கொடுத்தார். கடைசி ஓவரில் ராஜஸ்தான் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பிரசித் வீசிய 20வது ஓவரின் முதலிரண்டு பந்தில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த ஆர்ச்சர் வெற்றியை உறுதி செய்தார்.

ராஜஸ்தான் அணி 19.2 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.




# ஆதிக்கம் செலுத்திய ஆஸி.,



ஒன்பதாவது உலகக் கிண்ண தொடர் கடந்த 2007ல் முதல்முறையாக மே.தீவு கள் மண்ணில் நடந்தது. மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன.

இவை நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங் களை பெற்ற அணிகள் 'சுப்பர்-8' சுற்றுக்கு முன்னேறின. இத்தொடரின் லீக் சுற்றில் அதிர்ச்சி முடிவுகளை காண முடிந்தது. அனு பவ பாகிஸ்தான் அணி (132), அயர்லாந்திடம் (133/7) வீழ்ந்தது. இதேபோல முக்கிய லீக் போட்டியில் இந்திய அணி (191), பங்களா தேஷிடம் (192/5) தோல்வி அடைந்தது. இதையடுத்து, இந்திய துணை கண்டத்தின் இரண்டு நட்சத்திர அணிகளும் லீக் சுற்று டன் வெளியேற, உலக கிண்ண போட்டிகள் களை இழந்தன. முதலாவது அரையிறுதி யில் இலங்கை அணி, நியூசிலாந்தை வென் றது. இரண்டாவது அரையிறுதியில் அவுஸ்தி ரேலிய, தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

**ஓவர் குறைப்பு**

பார்படோசில் நடந்த இறுதிப் போட்டியில் முன்னாள் சம்பியன்களான அவுஸ்திரே லியா - இலங்கை அணிகள் மோதின. மழை காரணமாக ஓவர்களின் எண்ணிக்கை 38 ஆக குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பாட்டம் செய்த அவுஸ்திரேலிய அணிக்கு கில்கிறிஸ்ட் அதிரடி ஆரம்பம் வழங்கினார். பவுண்டரி, சிக்சர் மழை பொழிந்த இவர், 149 ஓட்டங் களை விளாசினார். இதன்மூலம் உலக கிண்ண இறுதிப்போட்டியில் அதிக ஓட்டாங் கள் எடுத்து சாதனை படைத்தார். ஹைடன் (38), அணித் தலைவர் பொன் ரிங் (37) அசத்த, 38 ஓவர்க ளில் 4 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைக் குவித்தது.

**இலக்கு மாற்றம்**

கடின இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு ஜெயசூர்ய (63), சங்கக்கார (54) நம் பிக்கை கொடுத்தனர். அடுத்து வந்தவர்கள் ஏமாற்றினர். இந்த நேரத்தில் மீண்டும் மழை குறுக்கிட, 36 ஓவர் களில் 269 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென இலக்கு மாற்றி அமைக்கப்பட்டது. 33வது ஓவரில் வெளிச்ச மின்மை காரணமாக போட்டி நிறுத்தப்பட் டது.

இப்போட்டியை அடுத்த நாள் நடத்தலாம் என நடுவர்கள் தெரிவித்தனர். ஆனால், இலங்கை அணித் தலைவர் ஜெயவர்த்தன ஆட்டத்தை தொடர விருப்பம் தெரிவித்தார். அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொன் ரிங் சுழற்பந்துவீச்சாளர்களை மட்டும் பயன் படுத்த ஒத்துக் கொண்டார்.

இறுதியில் இலங்கை அணி 36 ஓவர் களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்கள் எடுத்து, தோல்வி அடைந்தது. 'டக்வொர்த் - லீவிஸ்' விதிமுறைப்படி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்தி ரேலிய அணி, தொடர்ந்து மூன்றாவது

**உல்மர் மர்மம்**

கடந்த 2007, உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் பயிற்சி யாளராக இருந்த பொப் உல்மர், தனது ஹோட்டல் அறையில் மர்மமான முறை யில் மரணம் அடைந்தார். இங்கிலாந்தை சேர்ந்த இவரை, கிரிக்கெட் சூதாட்ட கும்பல் கொலை செய்ததாக சர்ச்சை எழுந்தது. இது பற்றி விசாரித்த ஜமைக்கா பொலிஸார், உல்மர் மரணம் இயற்கையானது என்று கூறி, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

# பதிலடி கொடுக்குமா சென்னை?

## இன்று மும்பையுடன் மோதல்

ஐ.பி.எல்., தொடரில் இன்று சென்னை, மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்துகின் றன. சொந்தமண்ணில் தொடர்ந்து வெற்றி பெற்று வரும் சென்னை, மீண்டும் சாதிக் கும் பட்சத்தில் மும்பை அணிக்கு பதிலடி கொடுக்கலாம்.

இந்தியாவில் 12வது ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. சென்னை சேப்பாக்கம் மைதா னத்தில் இன்று நடக்கும் லீக் போட்டியில் தலா மூன்று முறை சம்பியனான சென்னை, மும்பை அணிகள் மோதுகின்றன. நடப்பு சம்பியன் சென்னையை பொறுத்தவரை அணித் தலைவர் தோனி தலைமையில் இதுவரை பங்கேற்ற 11 போட்டிகளில் 8ல் வெற்றி பெற்று (3 தோல்வி) 16 புள்ளியுடன் 'நம்பர் 1' அணியாக உள்ளது. தவிர 'பிளே ஓப்' சுற்று வாய்ப்பையும் உறுதி செய்தது.

சொந்தமண்ணில் இந்த சீசனில் பங் கேற்ற 5 போட்டிகளிலும் சென்னை அணி வெற்றி பெற்றது. இன்று மும்பை அணிக்கு எதிராக வோட்சன், டு பிளசி ஜோடி மீண்டும் சிறப்பான ஆரம்பம் கொடுக்கும் பட்சத்தில், கடந்த முறை அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கலாம்.

'மிடில் ஆர்டரில்' ரெய்னா (245 ஓட்.,) கைகொடுத்தாலும், அம்பதி ராயுடு (213) ஒருநாள் போட்டிகளைப் போல அதிக பந்து களை வீணடிக்கிறார். மும்பைக்கு எதிரான கடந்த போட்டியில் 58 ஓட்டங்கள் எடுத்த கேதர் ஜாதவ், அடுத்த 7 போட்டிகளில் 48 ஓட்டங்கள் மட்டும் தான் எடுத்தார். உலக கிண்ணத் தொடருக்கு முன் இவர் அதிக ஓட்டங்கள் எடுத்தால் நல்லது.

கடந்த சீசனைப் போல மீண்டும் துடுப் பாட்டத்தில் நம்பிக்கை கொடுக்கிறார் தோனி. 10 போட்டிகளில் 314 ஓட்டங்கள் எடுத்த இவரது அசத்தல் இன்றும் தொடரும் எனத் தெரிகிறது.

**சகார் நம்பிக்கை**

பந்துவீச்சில் சகார் (14 விக்.,) எதிர்பார்ப் புக்கு மாறாக சிறப்பாக செயற்படுகிறார். ஷர் துல் தாகூர் (8 போட்டி, 6 விக்.,) ஏமாற்றம் கொடுக்கிறார். சுழலில் இம்ரான் தாகிர் 11 போட்டிகளில் 16 விக்கெட் சாய்த்து பெரிதும் உதவியாக உள்ளார். இவருடன் ஜடேஜா (9 விக்.,) கைகொடுக்கிறார். சென்னை என்ப தால் ஹர்பஜன் சிங் (5ல் 9 விக்.,) அணியில் இடம்பெறலாம்.

**குயின்ரன் அபாரம்**

மும்பை அணி 10 போட்டிகளில் 6 வெற்றி, 4 தோல்வி என 12 புள்ளிகள் பெற் றுள்ளது. மீதமுள்ள 4 போட்டிகளில் குறைந் தது 2ல் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதற்கு குயின்டன் டி கொக் (378 ஓட்.,), சூர்யகுமார் (243), அணித் தலைவர் ரோகித் சர்மா (228) என 'ரொப் ஓர்டர்' துடுப்பாட்டம் உதவ வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஹர்திக் பாண்ட்யா (241), குர்னால் பாண்ட்யா (142) சகோதரர்களும் தங்கள் பங்கிற்கு எதிரணிகளுக்கு குடைச்சல் கொடுக் கின்றனர்.


**சபாஷ் பும்ரா**

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் பும்ரா (11 விக்.,) அதிக விக்கெட்டுகளை வீழ்த்த வில்லை என்ற போதிலும் கடைசி நேரங் களில் ஓட்டங்களை கட்டுப்படுத்துகிறார். மலிங்க (8), ஹர்திக் பாண்ட்யா (8), குர் னால் பாண்ட்யா (6 விக்.,) ஆறுதல் கொடுக் கின்றனர். இளம் [illegible] வரவு மும்பை அணிக்கு பெரும் பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிபொருட்கள் இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல்

# இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் விசேட அதிரடிப்படையினர் தேடுதல்



(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் நேற்றுக்காலை வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நாட்டில் இடம்பெற்ற மோசமான குண்டுத் தாக்குதலையடுத்து நேற்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் பேரில் குறித்த ஆலயச் சூழலில் இவ்வாறு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (இ-10)

# காலவாய்க்குள்ளிருந்து 21 குண்டுகள் மீட்பு

## கொழும்பில் பரபரப்பு

(மட்டக்குளி)

கொழும்பு - மட்டக்குளி பிரதேசத்தில் கால்வாய் ஒன்றுக்குள் உர பையில் போட்டு வைக்கப்பட்டிருந்த 21 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த குண்டுகளை கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்று மதியம் மீட்டுள்ளனர்.

டெனிஸ் பந்து அளவுகளில் தயாரிக்கப்பட்ட குண்டுகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரிடம் நடத்திய விசாரணைகளில் இந்தக் குண்டுகள் தொடர்பான தகவல் தெரியவந்துள்ளது. (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுதாரி இலங்கை அரசின் ஏற்றுமதி விருது பெற்றவர்



(லண்டன்)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தாக்குதல் நடத்திய தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவர் இலங்கை அரசாங்கத்திடமிருந்து உயரிய விருது பெற்றவர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தாக்குதல் நடத்திய சகோதரர்களில் ஒருவரான இன்ஷாஃப் இப்ராஹிம் 2016ஆம் ஆண்டுக்கான அரச ஏற்றுமதி விருதைப் பெற்றவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த விருது அக்காலப் பகுதியில் இராஜாங்க அமைச்சராக விருந்த சுஜீவ சேனசிங்கவால் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த படத்தை பிரித்தானிய ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

தற்கொலை குண்டுதாரியின் தந்தை இப்ராஹிம் விருதை பெற்றுக்கொள்வதையும், குண்டுதாரியான இன்ஷாஃப் அருகில் நிற்பதையும் குறித்த படத்தில்காணக் கூடியதாக உள்ளது. (இ-7)

# ஐ.எஸ். தீவிரவாதத்தை ஆயுதம் மூலமாக மட்டுமே இல்லாதொழிக்க முடியும்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



(கொழும்பு)

தற்போது இடம்பெற்றுள்ள தொடர்குண்டுத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு உரிமைகோராது இருந்திருந்தால் இன்று நாட்டில் பலர் மீது வீண்பழி சுமத்தப்பட்டிருக்கும் எனவும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதத்தை ஆயுதம் மூலமாக மட்டுமே இல்லாதொழிக்க முடியும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன் ஐ.எஸ் தீவிரவாதிகளின் நோக்கம் உலகம் முழுவதும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

அவர்கள் நோக்கம் உலகத்தை மோசமாக அழிக்கவேண்டும் என்பதாகும். தாம் வழிபடும் மதம் அல்லாது ஏனையே மதத்தவரை கொன்று குவிக்க வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கியுள்ளனர்.

இதனை நாம் பேச்சுவார்த்தை மூலமாக தடுக்க முடியாது. ஆயுதம் மூலமாகவே இதனை எம்மால் தடுக்க முடியும்.

விடுதலைப் புலிகளை அழித்தது போன்ற செயற்பாடு அல்ல இது. பிரபாகரனுடன், ஜே.வி.பியுடன் செய்த யுத்தமாக இதனை கருதக்கூடாது.

ஆகவே இதற்காக எமது பாதுகாப்பு செயற்பாடுகளை பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமை யும், வருமானம் திருப்தித ரும் வகையில் அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பொது வழியில் புகழ்கூடும்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, திடீர் வருமானங்கள் ஏற்பட லாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் ஆர்வம் கூடும், மனக்கிலேசங்கள் கூடும் நாள், பயணத்தால் பலனுண்டு.

**கடகம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வருகையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், நீண்ட நேரம் பணிபுரியும் நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள் வருமானம் திருப்தி தரும்.

**தனுசு:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்:** வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கிரகநிலை: சுக் | புத, சூரி | செவ் | ராகு | சந் | சனி, குரு கேது.

கிரகநிலை
சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்

**26.04.2019**
சித்திரை 13, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சப்தமி பிற்பகல் 5.19 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 5.59-7.29 மணிவரை
இராகுகாலம் 10.29-11.59 மணிவரை

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ பரிபாலன சபையின் கண்டனமும் அனுதாபங்களும்

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று ஐ.எஸ். தீவிரவாதிகளால் காட்டுமிராண்டித்தனமான தேவாலயங்கள் மீதும் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் மீதும் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களால் பல நூற்றுக் கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டமையும் 500 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமுற்றும் உள்ளமையும் சைவபரிபாலன சபை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

வணக்கஸ்தலங்களுக்குள் இவ்வாறான செயல்களைச் செய்தவர்கள் உண்மையில் மனிதர்களா? அல்லது மிருகங்களா? என்று எண்ணத்தோன்றுகிறது. தமது சமயம் சார்ந்த ஆலயங்களுக்கு சென்று தமது தேவனின் பிறப்பை வரவேற்று தமது குறைகளைக் கூறி தமது வாழ்வுக்கு பரிகாரம் தேடச் சென்ற அப்பாவி மக்களுக்கு நடந்த இக் கொடூரச் செயலுக்கு ஆண்டவனின் மன்னிப்புக்கூட கிடையாது.

காரணம் இல்லாது மிலேச்சத்தனமான இச் செயல்களைச் செய்தவர்களுக்கு அன்பு, கருணை, பாசம், இரக்கம் என்று ஒன்றுமில்லையா? அன்பே சிவம் என்கிறது. சைவ சமயம் உள்ளவர்களைப் போல் அயலானையும் நேசி என்கிறது கிறிஸ்தவ சமயம். இறைவனிடம் கையேந்துந்துகள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை, இரக்கமாயிருங்கள் என்கிறது இஸ்லாம். இவ்வாறு சமயங்கள் மனித வாழ்வுக்கு வளம் சேர்க்கும் கொள்கைகளைக் கொண்டவையாக இருக்க கொடூரமான மனம் கொண்டவர்களும் நம்மிடையே இருந்து பல அக்கிரமங்களைச் செய்கிறார்கள் என்பதை நினைக்கும் போது இரத்தம் உறைகிறது.

21.04.2019 அன்று நடைபெற்ற இக்காட்டுமிராண்டித்தனமான செயல்களை சைவபரிபாலன சபை மீண்டும் மீண்டும் வன்மையாக கண்டிப்பதோடு இதில் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு காயப்பட்டவர்கள் விரைவில் தேற வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றது.

இவ்வாறான செயல்களுக்கு உடந்தையானவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தக்க தண்டனை பெற்றுக் கொடுக்க அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டுமென்றும் சைவப் பெருமக்கள் சார்பில் வேண்டிக்கொள்கிறது. (இ)

# அமெரிக்கா உதவுவதாக கூறியிருப்பதால் இலங்கையில் அதிகமான நடவடிக்கையில் தீவிரவாதிகள் ஈடுபட வாய்ப்பு உண்டு

## மாவை.சேனாதிராசா சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம் )

இலங்கையில் தீவிரவாத அமைப்புக்களின் குண்டுத் தாக்குதலால், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீரவிற்கு பாதிப்பு ஏற்படுமோ? என்ற அச்சம் நிலவுவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளதுடன், முஸ்லிம் மக்களுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமாயின் தமிழ் மக்களும் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல் திட்டமிட்ட குண்டுத் தாக்குதல் என்பது மிகத் தெளிவானது. இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இந்திய தரப்பினரால் இலங்கை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதாக அறியமுடிகின்றது.

அறிவிக்கப்பட்ட இந்தத் தகவலை, வைத்து உரிய நடவடிக்கை எடுத்து குண்டுத் தாக்குதலை பாதுகாப்பு அமைச்சும் மற்றும் பொலிஸ் திணைக்களம், படையினர் தரப்பு உட்பட அரசாங்கம் குறிப்பாக ஜனாதிபதியும் தவிர்ப்பதற்கு தவறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் உயிரிழந்துள்ளார்கள். வெளிநாட்டிற்குச் செல்வதற்காக விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் மக்கள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வெளிநாட்டவர்கள்பலர்காணாமல் போயுள்ளதாகவும் அவர்களின் உறவினர்கள் எம்மிடம் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தக் குண்டுத் தாக்குதலில் ஏனைய மதத்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். முன் எப்போதும் இல்லாதவாறு ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற தீவிரவாத அமைப்பு உலகளாவிய ரீதியில் செயற்படும் அமைப்பு இலங்கையிலும் தனது தீவரவாதத்தை தொடங்கியுள்ளது.

நியூசிலாந்தில் நடைபெற்ற சம்பவத்திற்கும், இலங்கை சம்பவத்திற்கும் முடிச்சுப் போடுவது என்ன என்பது பற்றி எமக்குத் தெரியவில்லை. 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு கோரி நடைபெற்ற யுத்தத்தில் எத்தனையோ லட்சம் மக்கள் உயிரிழந்து, அந்த நிலைமைகள் ஓய்ந்துள்ள போது, இந்தச் சம்பவத்தினால் நாடு முழுவதும் அச்ச நிலை தோன்றியுள்ளது. இந்தச் சம்பவத்தினால், தமிழ் மக்கள் மேலும் அச்சமடையும் நிலைமை காணக்கூடியதாக உள்ளது.

அவசரகால நிலை ஒன்றினை உருவாக்கி, இராணுவத்தினர் புலனாய்வுப் பிரிவினர் சோதனைகளை நடத்துகின்ற போது, முன்பு போன்று தமிழ் மக்கள் பாதிக்காத வகையில் தமது சோதனைகளை நடத்த வேண்டியது அவசியம்.

ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பு முஸ்லிம் அடிப்படைவாதிகளாக இருக்கின்ற நேரத்தில் இந்த நாட்டில் இருக்கும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இந்துக் கோவில்கள், முஸ்லிம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மாறி மாறி தாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் மக்களுக்கு எதிரான பல நடவடிக்கைகள் இந்த நாட்டில் அதிகரித்திருந்ததையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளைப் பார்க்கும் போது, முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் தீவிரவாத நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களும் தப்பிக்கொள்ளாத வகையில் நெருக்கடிகளுக்குள் ஆளாகக் கூடும்.

இதனால், சர்வதேச நாடுகளின் தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்கவுள்ளன. 2001 ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினால் அமெரிக்கா மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு தான் உலகம் முழுவதும் பயங்கரவாதத்தை தடை செய்வதற்கான பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், அமெரிக்கா இலங்கைக்கு உதவுவதாக கூறியிருப்பதும், அதனால், தீவிரவாதிகள் இலங்கையில் அதிகமான நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்புக்கள் உள்ளன. இது எமது கடந்த கால நடவடிக்கைகளில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தப் போகின்றது தென்பதும், இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் பாதிப்பு ஏற்படுமா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த நிலைமைகளை கருத்திற் கொண்டு, எமது அரசியல் நடவடிக்கைகளையும், இனப்பிரச்சினைக்கான நடவடிக்கைகளிலும், மிகவும் புத்திசாலித்தனமாகவும், தந்திரோபாயமாகவும், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் திட்டவட்டமாக நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# பிரதேச சபை மூலம் குடிநீர் வழங்க தென்மராட்சி செயலகம் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குடி நீர்ப் பற்றாக்குறை காணப்படும் இடங்களுக்கு நேற்று 25 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை சாவகச்சேரி பிரதேச சபை மூலம் குடிநீர் வழங்கத் தென்மராட்சி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய நாள் ஒன்றுக்கு பொது இடங்களுக்கு 39 ஆயிரத்து 500 லீற்றர் குடிநீரும் பாடசாலைத் தினங்களின் போது பாடசாலைகளுக்கு 12 ஆயிரம் லீற்றர் குடிநீரும் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-114)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் பெற்றோர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் அறிவித்துள்ளார். (இ-114)

# வடமாகாண பாடசாலைகளில் அசாதாரண ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தவும்

## கல்வி அமைச்சின் செயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகள் தோறும் அசாதாரண சூழ்நிலை ஒழுங்குவிதிகளைஉடன்நடைமுறைப்படுத்தமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் மாணவர் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த ஒழுங்கு விதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி திருவருள் மிகு ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டாந்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.05 மணிமுதல் முற்பகல் 10.25 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெறும். (இ-5)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்ரர் திருக் கோவிலின் பொதுக்கூட்டம் நாளை 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலய பரிபாலன சபைத்தலைவர் சி.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் பதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். (இ-5)

# ஏழு வர்த்தகர்களுக்கு 1,40,000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளா அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய யாழ்.வர்த்தகர்களுக்கு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றத்தால் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டதாக வடமாகாணப் பாவனையார் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் முஹமட் சாவிக் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் நடத்தப்பட்ட திடீர் சுற்றி வளைப்புக்களின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய 7 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டதன் அடிப்படையில் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றத்தால் தண்டப்பணம் அறவிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# சிந்தனைக்கூடத்தில் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கு வாழ் மக்கள் எதிர் கொள்ளும் பொருளாதார, அரசியல், சமூக, கல்விசார் மேம்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி உதவும் நோக்கில் ஓய்வு பெற்ற பல்கலைக் கழக கல்வியாளர் ஒன்றியம் என்னும் அமைப்பை உருவாக்கும் நோக்கில் கடந்த 09.03.2019 அன்று ஒன்றுகூடி ஆராய்ந்து, இவ்வமைப்பில் இன்னும் பல்துறைசார் கல்வியாளர்களை ஒன்று சேர்க்கும் வகையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்திற்கு அமைவாக நாளை 27 ஆம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை இல: 121, இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறும்.

இதற்கு ஓய்வு பெற்ற பல்கலைக் கழக கல்வியாளர் அனைவரையும்வருகை தரும்படி அமைப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் தமக்கும் இதயமது இருப்பதாமோ?



## கம்பவாரிதி இ.ஜெயராஜ்

உலகதிர மீண்டும் ஒரு தீமை இந்த
ஒப்பற்ற தேயமதில் விழைந்து போச்சாம்!
நலங்களெலாம் பொன்போல மெல்ல மெல்ல
நல்லவர்கள் வாழ்த்திடவே தலையைத் தூக்கி
நிலம் அதிர்ந்த போர் முடிந்து நிமிர்ந்து நிற்க
நிம்மதிதான் இனி என்று நினைந்தவேளை
குலம் அதிர குண்டுகளும் வெடித்துச் சீறி
குதறியதே கொடுமைதனை என்ன சொல்ல?

தீயவர்கள் பாவமெலாம் பொறுத்த ஐயன்
சிலுவைதனைச் சுமந்தே தான் செகத்தோர் வாட
மாயும் வரை சிலுவையிலே அறையப்பட்டு
மண்மீது உயிர்போக்கி உயிர்த்த நாளில்
தேயமெலாம் அவன் புகழை நினைந்து நல்ல
தேற்றமுறும் வேளையிலே மனங்கள் ஒன்றி
தாயெனவே பகைவர்க்கும் அன்பு செய்த
தன்னளியோன் புகழ் பாடி வணங்கி நிற்க.

பேய்மனதில் புகுந்ததனால் பெரிய வஞ்சப்
பிழை செய்ய நினைத்தோர்கள் அருளே இன்றி
போய் வணங்கி நின்றவரைப் புல்லாய் எண்ணிப்
பொசுக்கிட்டார் புவியெல்லாம் நடுங்கிப் போக
வாய் மனது உடலெல்லாம் வஞ்சம் கொண்ட
வலிய மனத் தீயவரும் வற்றும் நெஞ்சால்
தாய் மகவோடன்பு நிறை உறவையெல்லாம்
தரணி தனில் புழுவாகப் பொசுக்கிவிட்டார்.

கருணை நிறை இயேசுபிரான் கழலைப் போற்றி
கண்மூடி இருந்தவரைக் காலன் ஒப்பார்
இருளகன்ற நன்னாளில் இரையாய்க் கொண்டார்
இவர்தமக்கும் இதயமது இருப்பதாமோ!
வருபகையை உயிர்பறித்து மகிழும் இந்த
வஞ்சகரால் ஒருயிரை மீண்டும் மண்ணில்
உருவகித்துத் தந்திடவும் முடியுமாமோ?
ஒப்பற்ற தீச்செயலை என்னவென்போம்?

போர் நின்று போனதனால் புகழே பூத்து
பொன்னாக இத்தேசம் மலரும் வேளை
ஆர் கண்தான் பட்டதுவோ அழிவை மீண்டும்
அரங்கேற்றி மகிழ்கின்றார் அசிங்கம் தோய
நேர் நின்று பகை முடிக்கத் தெரியாப் புல்லர்
நினைந்தபடி உயிர் பறித்து மகிழ்வு கொண்டார்.
வேர் அறுந்த பகை மீண்டும் விளைந்ததேயோ
வேற்றுமைகள் விளைந்தேதான் தொலைந்ததேயோ!

மனிதர்களை ஒன்றாக்க வந்த நல்ல
மாண்புடைய மதங்களொடு மொழிகள் தன்னை
தனிப்பகையின் கருவிகளாய் ஆக்கித் தீயர்
தர்மமதைச் சிதைக்கின்றார் தருக்கே ஓங்க
இனிப் பழையபடி இந்த மண்ணில் தீமை
எழுந்திட்டால் என் செய்வோம்? எங்கள் தேயம்
சனி மகத்தில் புகுந்ததென சரியும் அன்றோ!
சஞ்சலங்கள் தீர்த்திடுவார் எவரோ பாரில்

உயிர் இழந்து உடல் புண்ணாய் உழலும் எங்கள்
உறவுகளை அன்பதனால் அணைத்து நிற்போம்.
பயம் அறுந்து அவர் நிமிரப் பக்கம் நின்று
பண்பாக அவர் துயரைப் பகிர்ந்து நிற்போம்.
கயவர்களால் இம்மண்ணின் அமைதி தானும்
கவிழாமல் நாம் கைகள் கோர்த்து நிற்போம்.
அயலவரை மதம் மொழியைக் கடந்து நின்று
அன்பதனால் உறவாக்கி மகிழ்ந்து நிற்போம்.

வம்பதனால் தீமை செய்வோர் வற்றும் நெஞ்சும்
வழிமாறி நன்மையின் பால் வருதல் வேண்டும்
தம்முறவை இழந்திதயம் வாடி நிற்கும்
தமரெல்லாம் மனந்தேறி நிமிர்தல் வேண்டும்.
வெம்பகையை விளைக்கின்ற வீணரெல்லாம்
விழிதிறந்து உண்மை ஒளி காணவேண்டும்
கம்பனது எண்ணம் போல கலியும் தேய
கனிந்தேதான் மானுடமும் வெல்லவேண்டும்.

# பயங்கரவாத இயக்கத்தைத் தடைசெய்து கயவர்களை பூண்டோடு அழியுங்கள்

## அமைச்சர் றிசாத் ஆவேசம்

(கொழும்பு)

கிறிஸ்தவர்களின் ஈஸ்டர் திருநாளன்று தேவாலயங்களிலும் பிரபல ஹோட்டல்களிலும் மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்தி அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்தும் காயப்படுத்தியும் இந்த நாட்டில் மிக மிக மோசமான ஈனச் செயலைச் செய்த பயங்கரவாத இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமெனவும் இந்தக் கயவர் கூட்டத்தை பூண்டோடு அழித்தொழிக்க வேண்டுமெனவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.



நேற்று முன்தினம் மாலை பாராளுமன்றத்தில் உரையாற்றிய றிசாத் பதியுதீன் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் அழிக்கப்பட வேண்டுமென சிந்திக்கின்ற, செயற்படுகின்ற எங்களைப்போன்ற அரசியல்வாதிகளை இந்தப் பயங்கரவாதிகளுடன் சம்பந்தப்படுத்தி அவர்களுக்கு உற்சாகப் படுத்த வேண்டாமெனவும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டாமெனவும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனைய பயங்கரவாதிகள் போன்று இவர்களை சாதாரணமானவர்களாக நினைத்து எங்களுடன் முடிச்சுப் போட வேண்டாமெ னவும் நாட்டை குட்டிச்சுவராக்க வேண்டாமெனவும் பணிவாகக் கேட்கின்றேன்.

பயங்கரவாதத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு கடல் வழியாக வந்த ஒரு இலட்சம் அகதிகளில் நானும் அடங்கு பவன் அவர்களுடன் அகதி முகாமில் வாழ்ந்தவன் அதிலிருந்து அரசியலை ஆரம்பித்தவன். நாடு இருந்தால் தான் அரசியல் செய்ய முடியும். நாளைய எமது எதிர்கால சந்ததியினரை வழிகாட்ட முடியும்.

எனவே நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இந்த கயவர்களை அழிக்கவும் பயங்கர வாதத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப் போம்.

அது மாத்திரமன்றி அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவுடன் இணைந்து பேராயர் மல்கம் ரஞ்சித்தை சந்தித்து எமது வேதனையை வெளிப்படுத்தினோம். ஜம்இய்யதுல் உலமா பல ஊடக சந்திப்புக்களை நடத்தியது. எனினும் ஊடகங்கள் அவற்றை சரிவர வெளிப்படுத்தவில்லை. சில ஊடகங்கள் மிக மோசமாக நடந்துகொள்கின்றன எனவும் தெரிவித்தார். (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## முக்கிய அறிவித்தல்

இயேசு அழைக்கிறார் ஊழியத்தினால் 2019 ஏப்ரல் 27ம் திகதி கண்டி நகரில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சிறப்பு ஆசீர்வாதக் கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம். கூட்டம் நடைபெறும் திகதி உங்களுக்கு அறியத்தரப்படும். தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருந்துகிறோம்.

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-03, சென்பற் றிக்ஸ் வீதி. ஆதன இல 5/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் யோசப் மரியம்மா என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை குருநகர் சம்பத்திரிசியார் வீதியைச் சேர்ந்தவரும் தற்காலம் இத்தாலி தேசத்தில் வசித்துவரும் தம்பித்துரை அமலதாஸ் தனது அற்றோனித்தத்துவக்காரன் ஞானப்பிரகாசம் யூட் கிஸ்ரியன் மூலம் வெளிப்பட்டு பிரசித்த நொத்தாரிசு S.இளங்கீரன் முகதாவில் 2016.10.31 ஆம் திகதியிட்டு 6388 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியின் 1979.12.05 ஆம் திகதி யாழ்.மாநகர முதல்வர் இ.விசுவநாதன் முகதாவில் 93 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி திருமதி.மரியம்மா யோசப்பினுக்கு சொந்தமுமாயிருந்து தனக்கு மாதாவழி உரித்தாக வந்தடைந்தது என வெளிப்படுத்தி குருநகர், சம்பத்திரிசியார் வீதி, இல 36ச் சேர்ந்த பீரிஸ் பிரியதர்ஷன் பெண் மிரியம் அஞ்சலா என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்:-** வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி, கோவிற்பற்று, குருநகர் இறை இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.பிறான்சிஸ் அவர்களின் வரைபட இலக்கம் 131/24/31.10.1979 இல் விஸ்தீரணம் பேட்சஸ் 5.78 கொண்ட ஆதனம் இதன் எல்லைகள்.

**கிழக்கு:-** ஒழுங்கையும் முடிக்குரிய ஆதனமும்.
**வடக்கு:-** சம்பத்திரிசியார் வீதி இல 36,36A கொண்ட ஆதனங்களும் வாய்க்காலும்
**மேற்கு:-** சம்பத்திரிசியார் வீதி.
**தெற்கு:-** சம்பத்திரிசியார் வீதி 34 ஆம் இலக்க வீடு இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை பீரிஸ் பிரியதர்ஷனும் பெண் மிரியம் அஞ்சலாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பீரிஸ்பிரியதர்ஷனும்பெண்மிரியம் அஞ்சலாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்பற்றிக்ஸ் வீதி,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(இம்மானுவல் ஆனல்ட்)
முதல்வர், மாநகர சபை.

(C-6205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத நல்லுறவை வலுப்படுத்தக் கோரி

# சர்வமதக் குழுவினர் அரச அதிபருக்கு மகஜர்



(குருமன்காடு)

இன, மத நல்லுறவை வலுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தும் முகமாக சர்வமத குழுவினருக்கும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபாவுக்கும் இடையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது சர்வமத குழுவினரால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களினால் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றோம். கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் இன, மத, பேதமின்றி ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளதுடன், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய கொடூரமான தாக்குதல்களை வவுனியா மாவட்ட சர்வமதக் குழுவினர் ஆகிய நாம் வன்மையாக கண்டிப்பதுடன், வவுனியாவில் மூன்று இனத்தவர்களும், நான்கு மதத்தவர்களும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும், பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்கு சர்வமத குழு ஒத்துழைப்பு வழங்கும். வவுனியா மாவட்ட அரச அதிபரும் ஏனைய அதிகாரிகளும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த உதவ வேண்டும் என கோரியிருந்தனர்.

இதன்போது பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்கள் கலந்து கொண்டதுடன் குண்டு தாக்குதல் தொடர்பில் தமது கவலையை தனித்தனியாக வெளிப்படுத்தியதுடன், ஒற்றுமையாக பயணிப்பது குறித்தும், தற்போதைய நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்தும் அரச அதிபருடன் கலந்துரையாடியிருந்தனர்.

அரச அதிபரும் இன, மத ரீதியாக அசம்பாவிதங்கள் ஏற்படா வண்ணம் இருக்க அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும், ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் எந்நேரமும் ஏதாவது பிரச்சினைகள் எனில் மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார். (7-250)

# குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு கிளிநொச்சி இளைஞர்கள் இரத்ததானம்

(பரந்தன்)

கடந்த 21 ஆம் திகதி ஈஸ்ரர் தினத்தன்று குண்டு வெடிப்பில் காயமடைந்த மக்களுக்கு குருதி வழங்கும் முகமாக கிளிநொச்சி இளைஞர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் இரத்ததானம் செய்துள்ளனர். (7-312)

# அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்

(கரைச்சி)

கிளிநொச்சி நகர வட்டாரத்தை உள்ளடக்கிய கிளி நகரம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் ,கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் கரைச்சி பிரதேச சபையினால் நடைபெறவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 10 ஆண்டுகளாக கிளிநொச்சி நகரப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் அண்மைக் காலமாக அப்பகுதி அபிவிருத்தி திட்டங்களில் சிறிய முன்னேற்றகரமான வேலைகளை கரைச்சி பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது எனினும் அந்த பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை முறையான ஒழுங்குபடுத்தலிலும் அரசியல் சார்பற்று மக்களுடைய அபிப்பிராயங்களை மதிப்பளிக்கும் வகையில் இந்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு மக்களினால் தெரிவு செய்யப்படுகிற மக்கள் முன்னுரிமைப்படுத்துகின்ற வேலைத் திட்டங்கள் பட்டியலிடப்பட்டு அதன் மூலம் அபிவிருத்தி பணிகளை செய்ய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார். (7)




# குண்டுத் தாக்குதல்களுக்கு அந்தணர் ஒன்றியம் கண்டனம்

(குருமன்காடு)

மட்டக்களப்பு மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பிற்கு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இது தொடர்பாக வவுனியா அந்தணர் ஒன்றியச் செயலாளர் ஜெ.மயூரக்குருக்கள் அனுப்பி வைத்துள்ள செய்திகுறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது. இந்த அசம்பாவித நிகழ்விற்கு யார் பொறுப்பாளிகளோ அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஒரு மதத்தின் புனிதநாளில் இரத்தக்கறை படிந்த நிகழ்வினை நடத்தியமை என்பது மனிதாபிமான ஓர் மனித நடத்தை உடைய ஒருவரினாலும் ஏற்க முடியாத ஒன்று. இழப்புகளைச் சந்தித்த இனமென்ற ரீதியில் அதனுடைய வலிகளையும் வேதனைகளையும் நாம் உணர்ந்தவர்கள். அந்த நினைவுகளே இன்னமும் மனதில் இருந்து அகலவில்லை. அவ்வாறு இருக்கையில், இறைவனின் சந்நிதியில் செய்யப்பட்ட இந்த ஈவிரக்கமற்ற கொலைத் தாக்குதல்களால் இறையிடங்களையே தவறுசெய்தவர்கள் மாசுபடுத்தி விட்டனர். தவறுகள் யார் செய்தாலும் சட்டத்தின் முன் தண்டனை வழங்கப்பட வேண்டும். யாரோ ஒரு தரப்பு தமது ஈனத்தனமான இயலாமையின் வெறியாட்டத்தை வெளிப்படுத்தும் செயற்பாடாக இது அமைந்துள்ளது.

இரத்தத்தினை சிந்தவைத்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். ஆகவே உதவிகளை ஒருவருக்கொருவர் புரிந்து உதவிகளை, ஒத்தாசைகளை வழங்கி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆறுதலாக இருப்போம். கொல்லப்பட்ட ஒவ்வொரு மக்களின் ஆன்மாக்கள் ஆன்ம ஈடேற்றம் பெற அனைவரும் பிரார்த்தனைகள் செய்வோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-250)

# முஸ்லிம்கள் செறிந்துவாழும் பகுதிகளில் இராணுவம், பொலிஸார் சுற்றிவளைப்பு



(குருமன்காடு)

வவுனியாவில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து அதிரடி சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இந்த சுற்றிவளைப்புகள் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4 மணியிலிருந்து 8 மணி வரையில் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா பட்டானிச்சூர் மற்றும் சாளம்பைக்குளம் பகுதிகளிலேயே இவ்வாறு அதிகளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது வீதியில் செல்லும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களையும் நிறுத்தி சோதனை செய்யப்பட்டது. எனினும் சந்தேகத்துக்கிடமாக எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவின் முக்கிய இடங்களான வைத்தியசாலை, பேருந்து நிலையம், மதஸ்தலங்கள் என்பற்றில் கடந்த சில தினங்களாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொதிகளுடன் வருபவர்களிடம் சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (7-250)

# பகிரங்க ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 2019.05.11 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது. (7)

# தலைக்கவசமின்றி பயணித்த இளைஞனை துரத்திப் பிடித்த போக்குவரத்து பொலிஸார்


(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவரை, பொலிஸார் துரத்திச் சென்று மடக்கிப் பிடித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூந்தோட்டத்தில் இருந்து வவுனியா நகர் பகுதி நோக்கி தலைக்கவசம் இன்றி சென்ற இளைஞனை போக்குவரத்து பொலிஸார் துரத்தி சென்று குடியிருப்பு பகுதியில் வைத்து மடக்கி பிடித்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். குறித்த இளைஞன் செலுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர்.

தலைக்கவசம் இல்லாது சென்றதன் காரணமாகவே குறித்த இளைஞன் துரத்தி செல்லப்பட்டதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (7-250)



நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியா தெற்கு பிரதேச சபை முன்றலில் நேற்றுக் காலை 10 மணியளவில் பிரதேச சபையின் தவிசாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா தெற்கு பிரதேச சபையில் கறுப்புக்கொடி கட்டப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதுடன், பிரதேசசபைக் கொடி மற்றும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டு வெடிப்பில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி



(கரணவாய்)

கொழும்பு, மட்டக்களப்பு பகுதிகளில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சிப் பகுதிகளில் நேற்று முன்தினம் புதன்கிழமை பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் அஞ்சலி செலுத்தி பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

இதேவேளை நெல்லியடி நகரில் சோககீதம் இசைக்கப்பட்டதுடன், கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (இ-60)

# ஆளில்லா விமானங்கள், ட்ரோன் கமராக்களைப் பறக்க விடத் தடை


(கொழும்பு)

இலங்கை வான் பரப்பில் ஆளில்லா விமானங்கள் மற்றும் அனைத்து விதமான ட்ரோன் (Drone) கமராக்களை பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் மீள அறிவிக்கும் வரையில் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# தற்கொலைத் தாக்குதல் குறித்த தகவல்களை மறைத்தோருக்கு தண்டனை வழங்க வேண்டும்!

## பேராசிரியர் திஸ்ஸ வலியுறுத்து



(கொழும்பு)

**நாட்டில் அண்மையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தமக்கு முன்பே தெரியும் என வீரவசனம் பேசுபவர்கள் மீது இலங்கைச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்கப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற மிக மோசமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலால் பலநூறு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

இந்த மூர்க்கத்தனமானதும் மிலேச்சத்தனமான தாக்குதலால் இனங்களுக்கிடையில் வேற்றுமைகளைத் தோற்றுவிக்க சில தீய சக்திகள் திட்டமிட்டுள்ளன.

இப்படியான சூழ்நிலையில் தாக்குதல் இடம்பெறப்போகிறது என்ற செய்தி தமக்கு ஏற்கனவே கிடைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

ஜனாதிபதி நாட்டில் இல்லாத சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பேற்க வேண்டும்.

எனவே பொதுமக்களுக்கு இடம்பெறவிருந்த பாரிய அனர்த்தம் தொடர்பில் தகவல் தெரிந்தும் அதை மறைத்தமைக்கும் மக்கள் நலன் தொடர்பில் அக்கறை செலுத்தத் தவறியமைக்காக சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பும் வெளிநாட்டுத் தீய சக்திகளுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் உள்ளவரை இது போன்ற சம்பவங்களை எதிர்நோக்க வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

நாட்டில் ஏற்பட்ட கொடூரத்துக்கு காரணமான அமைப்புக்கள் நபர்கள் தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டு தண்டனை வழங்குவதோடு தாமாகவே முன்வந்து தாக்குதல் தொடர்பில் தமக்கு முன்பே தெரியும் எனக் கூறியவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-10)

# ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பிற்கு எதிராக 12 முஸ்லிம் அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

ஒரு தனி மனிதனுடைய கொலையை முழு சமூகத்தினதும் கொலையாகக் கருதுமளவிற்கு இஸ்லாம் மனித உயிருக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கடுமையான தீவிரவாத இஸ்லாமிய அடிப்படை விழுமியங்களுக்கு எதிரான அமைப்பாகும். இஸ்லாமிய போதனைகளுக்கு முரணாக செயற்படும் இந்த தீவிரவாத அமைப்புக்களோடு எவரேனும் தொடர்புகளை ஏற்படுத்துவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எவரொருவர் தீவிரவாதத்துடன் தொடர்புடையவராக இருந்தாலும் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று நாட்டிலுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

நாட்டிலுள்ள அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, இலங்கை முஸ்லிம் பேரவை உள்ளிட்ட 12 முஸ்லிம் அமைப்புக்கள் இணைந்து விடுத்துள்ள செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# முப்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வெங்காய உண்மை விதை,நாற்று உற்பத்தி

## 210 பயனாளிகளை தெரிவு செய்ய நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணவிவசாயஅமைச்சால் யாழ். மாவட்டத்தில் வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் சுமார் 30 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வெங்காய உண்மை விதை உற்பத்தி மற்றும் நாற்று உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற வெங்காயத்திற்கு சிறந்த சந்தை வாய்ப்பும் கேள்வியும் காணப்படுகின்ற நிலையில் இவ் உற்பத்தியையும் செய்கையாளர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் இணையவுள்ள பயனாளிகளுக்கு மழை காலங்களில் உற்பத்தி நாற்றுகளைப் பாதுகாக்கும் நோக்கில் 50 வீத மானிய அடிப்படையில் வெங்காய உண்மைவிதை வலைவீடு வழங்கப்படுவதுடன் தெரிவு செய்யப்படும் பயனாளி ஒருவருக்கு வெங்காய விதை பிரித்தெடுக்கும் கருவி ஒன்றும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளிகள் மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 4<br>கி.பா:10 ¾செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L,சாரதி<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்<br>தொ.இ: B/2129 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 2<br>கி.பா: 71செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:B.Sc , Physiotherapist<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Banker, உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/4185 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை<br>கி.பா: 63சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L முச்சக்கர வண்டி ஓட்டுநர்<br>தொ.இ: B/2137 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 2<br>கி.பா: 35 ¼செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Com, Accountancy,Banking Course, Ass.Bank Manager<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Bank Manager, உள்நாடு<br>தொ.இ: G/4224 |
| பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 2<br>கி.பா: 23சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ: B/2154 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா: 38 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BIT பட்டதாரி, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4229 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 3<br>கி.பா: 29செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L,சாரதி<br>தொ.இ: B/2177 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 40 செவ் 2 அல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4231 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்

## அஸ்கிரிய பீடம் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடம் கோரியுள்ளது.

தேசிய தேவைகளைக் கருத்திற் கொண்டு புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளது.

விசேட கோரிக்கை அடங்கிய அறிக்கை ஒன்றை அஸ்கிரிய பீடம் வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு காரணங்களுக்காக நாட்டின் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் கடும் போக்குவாதத்தை இல்லா தொழிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தாக்குதலில் பலியானோருக்கு யாழ்.மாநகர சபையில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தற்கொலைத் தாக்குதலில் பலியானோர்களுக்கு யாழ் மாநகர சபையில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது தேசியக் கொடி, மாநகர சபை கொடி என்பன அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு மூன்று நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (இ-7)

# குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி





(மன்னார்)

நாட்டில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களை கண்டித்தும், குறித்த சம்பவங்களின் போது உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தியடையவும், அஞ்சலி நிகழ்வு மன்னாரில் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் நேற்று காலை 10 மணியளவில் இடம் பெற்றது. இதன் போது சர்வ மதத் தலைவர்கள், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப் பிரகாசம் அன்ரனி டேவிட்சன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலர்கலந்து கொண்டனர்.(7-285)






இயேசு கிறிஸ்து உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற கொடூர குண்டுத்தாக்குதலில் 350 ற்கும் மேற்பட்டோர் மரணம் அடைந்தனர். இன்னமும் பலர் அதி தீவிர சிகிச்சை பிரிவில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் இலங்கை மாத்திரம் இல்லாமல் உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று காலை 10 மணியளவில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினர் (msedo) ஏற்பாட்டில் அதன் குழுத்தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது. (படங்கள்-மன்னார் செய்தியாளர்)

# அடிப்படைவாத அமைப்புக்களை தடைசெய்ய ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?



## நாடாளுமன்றில் விமல் வீரவன்ச கேள்வி

இலங்கையில் மதரஸாக்களிலேயே இஸ்லாமிய பயங்கரவாதம் உருப்பெறுகின்றது. ஆகவே நாட்டில் அடிப்படை வாத அமைப்புகளை முதலில் தடை செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

வனாத்துவில்லுவில் வெடி பொருட்கள் மீட்கப்பட்ட பின்னரும் மாவனெல்லையில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட போதும் இது தொடர்பாக ஆராயுமாறு கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இந்த விடயத்தில் விசாரணைகளை முன்னெடுத்து ஏற்படும்.பாதிப்புகளை தடுக்குமாறு அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தோம். ஆனால் தற்போது மீண்டும் 10 வருடங்களின் பின்னர் பிள்ளைகளை வெளியில் அனுப்ப முடியாத நிலைமை உருவாகியுள்ளது.

இவ்வாறாக அச்ச நிலைமையை மீண்டும் கொண்டு வந்தது யார்? 2015 ஜனவரி 8ஆம் திகதி அச்ச நிலைமை இல்லாது செய்யப்பட்ட நாட்டையே தற்போதைய ஆட்சியாளர்கள் பொறுப்பேற்றனர். ஆனால் மீண்டும் அந்த நிலைமையை உருவாக்கியுள்ளனர். வீதியில் நடந்து செல்ல முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடு என இவர்களால் கூற முடியவில்லை. சர்வதேச பயங்கரவாதம் என்றே கூறுகின்றனர். அடிப்படை வாதத்திற்கு எதிராக சட்டத்தை செயற்படுத்துவதற்கு இவர்கள் இடமளிக்கவில்லை. தௌஹீத் ஜமாத் போன்ற அடிப்படை வாத அமைப்புகளை தடை செய்ய ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதன்போது வீரவன்ச கேள்வி எழுப்பினார். (இ-7)

# ஆயர் இல்லத்திற்கு இராணுவ பாதுகாப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ். ஆயர் இல்லத்திற்கு பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

கடந்த உயிர்த்த ஞாயிறு அன்று மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலை அடுத்து குறித்த பாதுகாப்பு நடவடிக்கை ஆயர் இல்லத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

குண்டு துளைக்காத அங்கிகளுடன் இராணுவத்தினர் அங்கு பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருவதுடன் ஆயர் இல்லத்திற்கு அருகாமையில் பாதுகாப்பு சோதனை நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# தொடர் குண்டு வெடிப்பிற்கும் அமைச்சர் றிசாத்திற்கும் தொடர்பு



## எஸ்.பி .குற்றச்சாட்டு

(கொழும்பு)

தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கும் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கும் தொடர்புள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

குண்டு தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேக நபராகக் கருதப்படும் மொஹமட் இப்ராஹிம் பிரபல வணிகர் ஆவார். அவருடன் றிசாத் பதியுதினின் தம்பி இணைந்து வணிக நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீதான குண்டு தாக்குதல் முயற்சியில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரொருவர் இவரது உறவினராவார். அத்தோடு மன்னார் பிரதேசத்தில் சுமார் 3000 ஏக்கர் காணி றிசாத் பதியூதீன் மற்றும் அவரது உறவினர்கள் பலரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பள்ளிவாசல்களை புனரமைப்பதற்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு நிதி கொள்ளையிடப்பட்டுள்ளமை தொடர்பிலும் அவர் மீது முறைப்பாடுகள் காணப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டு வெடிப்பு சூத்திரதாரியுடன் தொடர்பா?

# என் மீது அபாண்டமான பழி!

## கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா மறுப்பு



(ஏறாவூர்)

**கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து குண்டு வெடிப்பின் சூத்திரதாரி எனக் கருதப்படும் நபருடன் தன்னைத் தொடர்புபடுத்தி என்மீது மிக மோசமாக, அபாண்டமாகப் பழிசுமத்தி என்னுடைய நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் எழுதி வருவதை அவதானித்து தான் விசனமடைவதாக கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நான் வேட்பாளராக இருந்தபோது சகல வேட்பாளர்களும் அழைக்கப்பட்ட கலந்துரையாடலில் நானும் பங்குபற்றியிருந்தேன்.

ஒரு வேட்பாளர் என்ற அடிப்படையில் நானும் அதில் கலந்து கொண்டேன்.

அந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய சகல வேட் பாளர்களும் அதில் பங்குபற்றிக் கலந்துரையாடினார்கள்.

அவ்வாறன கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையே வைத்துக் கொண்டு இன்று என் மீது பழிசுமத்துவதற்காக ஊடகங்கள் பிரசுரித்து எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்க முனைகின்றன.

மேலும் குண்டு வெடிப்பின் சூத்திரதாரியும் அவரின் இயக்கமும் என்னுடைய அரசியலில் எனக்கு ஒரு போதும் ஆதரவு வழங்கியதும் கிடையாது எனக்காகப் பணியாற்றியதும் கிடையாது என்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### மாவனல்ல பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள்

(மாவனல்ல)

மாவனல்ல பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மாவனல்ல பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் இந்த மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதாகவும், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்களை பாதுகாப்பு தரப்பினர் தொடர்ச்சியாக சோதனையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### கலை நிகழ்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் வளர்ச்சி நிதிக்காக யாழ்.கைலாசபதி கலையரங்கில் 2019.05.04 ஆம் திகதி நடத்தப்படவிருந்த கலைச்சங்கமம் கலை நிகழ்வானது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மீளவும் இந் நிகழ்வு நடைபெறவுள்ள திகதி அனைவருக்கும் பத்திரிகைகள் மூலம் தெரியப்படுத்தப்படும் என யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## நாடாளுமன்றத்தை இலக்கு வைத்த ஐ.எஸ்

### விசாரணையில் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் குண்டுத் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொட- கிரிமெட்டிதென்ன பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது நாடாளுமன்றத்திற்குள் நுழைவதற்கான 6 அனுமதிப் பத்திரங்கள், 2 குண்டுகள், வரைபடம், 2 தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

27 வயதான குறித்த இளைஞன் கொழும்பு உணவகம் ஒன்றில் பணிபுரிந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞன் பலாங்கொட நீதிமன்றத்தில் தினம் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(இ-7)


## சூத்திரதாரிகளின் திட்டங்களை ஒன்றிணைந்து முறியடிப்போம்

### மதத்தலைவர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம் சமூகம் அமைப்பினருக்கும் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் தலைமையிலான குழுவினருக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்திகம் முற்பகல் யாழ்.முஸ்லிம் சமூகம் அமைப்பில் உள்ளடங்கும் யாழ் கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை யாழ்.பள்ளிவாசல்கள் நிர்வாக சபை என்பவற்றின் அங்கத்தவர்கள் யாழ்.ஆயர் இல்லத்திற்கு சென்று யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையிலான குழுவினரை சந்தித்தனர்.



இதன் போது இயேசு பிரான் உயிர்த்த புனிதமான நம்பிக்கையளிக்கும் நாளில் மிலேச்சத்தனமான கொடூரத் தாக்குதல்கள் என்றுமே மன்னிக்க முடியாதது எனவும் வன்முறைகளை தமது வழிகளாக கையாள்பவர்களின் நோக்கம் எமது நாட்டை பல்வேறு வழிகளிலும் பாதிப்படைய செய்வதே.

எனவே நீண்டகாலமாக பல்வேறு வழிகளிலும் பிரச்சினைகளால் எமது வளங்களை இழந்ததும் எமக்கெதிராக பின்னப்படும் எவ்வாறான சூழ்ச்சிகளாக இருந்தாலும் முறியடிப்பதற்கு உணர்வுடன் கூடிய எமது ஒன்றிணைவு பெரும் பலமாக இருக்கும். அதற்கான நம்பிக்கையை கட்டி எழுப்புவதற்கான நேரமும் இதுவே என இரு தரப்பினரும் கலந்துரையாடலில் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

மிலேச்சதனமிக்கவர்கள் தமது கொடிய நோக்கங்களை அடைய பல்வேறு வழிகளிலும் முயல்கின்றார்கள். எனவே மக்கள் எந்த நேரத்திலும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து சூத்திரதாரிகளின் திட்டங்களை முறியடிக்க பலமான ஒன்றிணைவுடன் கூடிய அர்ப்பணிப்போடு இருக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும் இனிவரும் காலங்களில் இவ்வாறான குரோத நோக்கங்களை களைந்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி எடுப்போம் என இரு தரப்பினரும் தெரிவித்தனர். (இ-7)

## இஸ்லாமிய இராச்சியத்தை உருவாக்குவதே தாக்குதலாளிகளின் நோக்கம்-விஜித ஹேரத்

(கொழும்பு)

இலங்கையில், இஸ்லாமிய ராச்சியத்தை உருவாக்குவதே தாக்குதலாளிகளின் முக்கிய நோக்கம் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதத்துக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு கட்சி அரசியலை விட்டு குறுகிய காலத்துக்கேனும் தேசிய நிகழ்ச்சி நிரலுக்கேற்றவகையில் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான தகவல் கிடைக்கும் போது அதுகுறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் செயலாளருக்கே இருக்கின்றது. பொதுவாக அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

இவ்வாறான அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வு துறையின் தகவல் கிடைத்தும் தாக்குதலை தடுக்க முடியாமல் போனது குறித்து அரசாங்கம் மக்கள் முன்னிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் இடம்பெற்ற விடயங்களின் மூலம் நாங்கள் கற்றுக் கொள்வதாக இருந்தால் ஆரம்பமாக இடம்பெற்ற தவறை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் இதனை ஆளுக்கு ஆள் குற்றஞ் சுமத்துவதன் மூலம் பொறுப்பில் இருந்து விலகமுடியாது.

ஆரம்பத்தில் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு. நாட்டின் தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ற வகையில் அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.



அத்துடன் நாட்டின் தற்போதைய சமாதான சூழ்நிலையில் இவ்வாறான பாரிய தாக்குதல் ஒன்று இடம்பெறுவதற்கு வாய்ப்பு இல்லை என்ற நம்பிக்கையில் செயற்பட்டதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது என்றாலும் இந்த நிலைமையை அடிப்படையாகக் கொண்டு சிலர் அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர். இதற்கு இடமளிக்கக் கூடாது" என்று அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## என்னைப் பதவி நீக்க முடியாது

### ட்ரம்ப் திட்டவட்டம்



(வோஷிங்டன்)

தன்னைப் பதவி நீக்கம் செய்ய முடியாது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, குடியரசு கட்சி வேட்பாளராக களம் இறங்கிய டொனால்ட் ட்ரம்ப்பை வெற்றி பெறவைப்பதற்காக ரஷ்யா உதவியதாக புகார் எழுந்தது.

இதை ட்ரம்ப் திட்டவட்டமாக மறுத்தார். ஆனால் இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜனநாயக கட்சியினர் அழுத்தம் கொடுத்தனர்.

அதன்பேரில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு குழுவின் முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் தலைமையில் சிறப்பு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. சுமார் 2 ஆண்டு காலம் தீவிர விசாரணைக்கு பிறகு முல்லர் தலைமையிலான விசாரணைக்குழு தன்னுடைய அறிக்கையை, அமெரிக்க அரசு நீதித்துறையிடமும், அட்டர்னி ஜெனரல் வில்லியம் பாரிடமும் தாக்கல் செய்தது.

அதன் பின்னர் அட்டர்னி ஜெனரல் வில்லியம் பார், அந்த அறிக்கையில் உள்ள முக்கிய அம்சங்களை மேற்கோள்காட்டி, ஜனாதிபதி ட்ரம்ப் குற்றமற்றவர் என நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். ஆனால் ஜனநாயக கட்சியினரோ, முல்லரின் அறிக்கையை முழுமையாக வெளியிடாமல் ட்ரம்பை குற்றமற்றவர் எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றனர்.

எனவே விசாரணைக் குழுவின் முழுமையான அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அவர்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி 448 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையில், "2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தற்போதைய ஜனாதிபதி ட்ரம்போ அவரது பிரசார குழுவை சேர்ந்தவர்களோ ரஷ்யாவுடன் சேர்ந்து சதி செய்தார்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை" எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், விசாரணை குழுவில் இருந்து முல்லரை நீக்க வெள்ளை மாளிகை சட்டத்தரணிக்கு ட்ரம்ப் உத்தரவிட்டதாகவும் ஆனால் அதில் உடன்பாடு இல்லாததால் வெள்ளை மாளிகை சட்டத்தரணி பதவி விலகியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதே சமயம் ட்ரம்ப் விசாரணையைத் தடுக்க முயன்றாரா என்பது பற்றி உறுதியான சட்ட முடிவை எட்ட முடியவில்லை என ராபர்ட் முல்லர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார்.

இதையடுத்து, விசாரணைக் குழுவின் அறிக்கையின் மூலம் ட்ரம்ப் விசாரணையை தடுத்து நிறுத்த பல்வேறு வகையில் இடையூறு அளித்தது தெரியவந்திருப்பதாக கூறி, அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனநாயக கட்சியினர் அழுத்தம் கொடுத்தனர்.

இந்த நிலையில் தன்னை பதவி நீக்கம் செய்யக்கோரும் ஜனநாயக கட்சியினரின் கோரிக்கைக்கு ட்ரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் டுவிட்டரில் கூறியிருப்பதாவது,

மிகப்பெரிய குற்றங்கள் மற்றும் தவறான நடவடிக்கைகளுக்காக மட்டுமே ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய கோர முடியும். நான் எந்த குற்றமும் செய்யவில்லை. எனவே என்னை பதவி நீக்கம் செய்ய முடியாது.(7)

## செவ்வாய்க்கிரகத்தில் நிலநடுக்கம் புகைப்படத்தை வெளியிட்ட நாசா



(வோஷிங்டன்)

பூமியில் நிலநடுக்கம் ஏற்படுவதைப் போல், செவ்வாய்க் கிரகத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தை முதன்முறையாக நாசா புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தில் ஏற்படும் பூகம்பங்கள், நிறைடுக்கங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் "இன்சைட்" விண்கலத்தை கடந்த ஆண்டு அனுப்பியது.

இந்த விண்கலம் கலிபோர்னியாவின் வாண் டன்பர்க் விமானப்படைத் தளத்தில் இருந்து செலுத்தப்பட்டது.

இந்த விண்கலம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கியது.

செவ்வாய்க்கிரகத்தில் நிலநடுக்கங்கள், பனிப்பாறை சரிவுகள், விண்கற்களின் தாக்குதல் போன்றவை ஏற்படும்.

இவற்றை துல்லியமாக ஆய்வு செய்யவே இந்த இன்சைட் விண்கலம் ஏவப்பட்டதாக விஞ்ஞானிகள் கூறினர்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி நிறைடுக்கம் ஏற்பட்டுள்ளதாக இந்த விண்கலத்தில் பதிவாகியுள்ளது. நிலநடுக்கம் செவ்வாயின் உட்பகுதியில் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. (7)

## தென்னாபிரிக்காவை புரட்

## உயிரிழப்பு எண்ணிக்கை

(டர்பான்)

**தென்னாபிரிக்காவின் குவாசுலு-நதால் மாகாணம் மற்றும் டர்பான் நகரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60ஆக உயர்வடைந்துள்ளது.**


உயிரிழந்தவர்களுள் ஆறு மாத குழந்தையொன்றும் உள்ளடங்குவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளதாக பாதிப்பிற்குள்ளான பிராந்தியங்களை நேரில் ஆய்வு செய்த ஜனாதிபதி சிறில் றமபோசா தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகள் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

கடற்கரையோர பிராந்தியங்களில் மேலும் வெள்ளப்பெருக்கு மற்றும் கடும் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாகிஸ்தானில் பயங் இம்ரானின் கருத்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுவது உண்மை என்று கூறிய பிரதமர் இம்ரான் கானின் கருத்துக்கு கண்டனம் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் 2 நாள் அரசுமுறை பயணமாக ஈரான் சென்று இருந்தார். அப்போது டெஹ்ரானில் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரௌகானியுடன் கூட்டாக பேட்டி அளித்தார்.

அப்போது, "பாகிஸ்தானில் செயற்படும் பயங்கரவாத அமைப்புகளால் ஈரான் மிகவும் பாதிக்கப்படுவதை நான் அறிவேன். பயங்க

## ஐ.எஸ்.குழந்தைகள் ந ஆதரவற்றோர் இல்லம்

### நோர்வே பிரதமர் உறுதி



(ஓஸ்லோ)

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினரின் குழந்தைகள் நல்வழியில் செயற்பட வேண்டி, ஆதரவற்றோர் இல்லம் அமைத்து தரப்படும் என நோர்வே பிரதமர் எர்னா சோல்பெர்க் அறிவித்துள்ளார்.

லண்டன், பிரான்ஸ், நோர்வே ஆகியவற்றில் இருந்து ஐ.எஸ். அமைப்பில் இணைய பலர் சிரியாவிற்கு சென்றனர். அண்மையில் அமெரிக்கப்படையிடம் சில ஐ.எஸ். பயங்கரவாதிகள் சிக்கினர்.

இதையடுத்து அவர்களது குடும்பங்கள் குறித்து நோர்வே பிரதமர் எர்னா சொல்பெர்க் கூறுகையில், "நாங்கள் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்காக இல்லம் கொடுக்கவில்லை. அவர்களது மனைவிகளுக்கும் இடமில்லை. ஆனால் அவர்களால் வழி தவறி நிற்கும், கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு தான் ஆதரவற்றோர் இல்லம் அமைக்க உள்ளோம்" எனத் தெரிவித்தார்.

இதையடுத்து எர்னாவின் இந்த கருத்து பல அரசியல் தலைவர்களுக்கும் அதிர்ச்சி தரும் விதமாக இருந்தது. இது குறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ...ரட்டிப்போட்ட வெள்ளம்! ...கை 60 ஆக அதிகரிப்பு



இந்நிலையில், மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு தொடர்ந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடும் வெள்ளப்பெருக்கு காரணமாக வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் இரு பல்கலைக்கழகங்கள் என்பனவும் பலத்த சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## சிரியாவில் குண்டுவெடிப்பு 17 பேர் பலி; பலர் காயம்



(டமாஸ்கஸ்)

சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் வடமேற்கு பகுதியில் டக்ஃபிரி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நகரொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வெடிவிபத்தில் 17 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

சிரியத்தலைநகர் டமாஸ்கஸ்ஸில் இருந்து வடக்குப்புறமாக 330 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஜிஸ்ர் அல்-ஷூக்கோர் நகரிலேயே இந்த வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதன் போது, பல்வேறு கட்டடங்களும் சேதமடைந்ததாக குறிப்பிடப்படுகிறது.

இந்தக் குண்டுத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களில் அதிமானோர் பொதுமக்கள் எனவும், காயமடைந்தவர்களில் பலர் மோசமான நிலைமையில் உள்ளதால், உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என வைத்தியசாலைத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (7)

## ...ங்கரவாத அமைப்பு; ...த்துக்கு கண்டனம்



...ரவாத அமைப்புகள் செயற்படுவதை ஈரானும், பாகிஸ்தானும் விரும்பவில்லை. அதில் உறுதியாகவும், நம்பிக்கையுடனும் இருக்கிறோம்.

இரு நாடுகளிடையே நல்ல நிலையும், நட்பையும் உருவாக்கும் என நம்புகிறோம்" என்றார். இவரது இக்கருத்துக்கு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி தலைவர் குர்ரம் தஸ்தீர் கூறும் போது, "பாகிஸ்தானில் பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுவதாக பிரதமர் கூறியிருப்பது முதன் முறையாக நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானது.

வெளிநாட்டு மண்ணில் இருந்து கொண்டு இத்தகைய ஒப்புதல் வாக்குமூலத்தை இதுவரை எந்த பிரதமரும் அளித்தது இல்லை. இந்த அறிக்கை மூலம் பிரதமர் இம்ரான்கான் ராச்சிய ரீதியிலான மிகப்பெரிய தவறை செய்துவிட்டார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஊறு இழைத்துவிட்டார். இதற்குமுன்பு இந்திய பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று மோடி பிரதமரானால் தான் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என முரண்பாடான கருத்து ஒன்றைக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## மிதக்கும் அணுமின் நிலையம் வெற்றிகரமாகப் பரிசோதனை



ரஷ்ய நிறுவனம் தயாரித்துள்ள உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையத்தில் வெற்றிகரமாக மின் உற்பத்தி செய்து பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

ரஷ்யாவைச் சேர்ந்த ரொஸடொம் ஸ்டேட் அணுசக்தி கோர்பரேஷன், உலகின் முதல் மிதக்கும் அணுமின் நிலையத்தை உருவாக்கியுள்ளது. பெரும் பொருட்செலவில் மிகப்பெரிய சரக்கு கப்பலை போல் காட்சியளிக்கும் இந்த மிதக்கும் அணுமின் நிலையத்தில், மின்சார உற்பத்தி வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

மிதக்கும் அணுமின் நிலையத்தில் சோதனை முயற்சி வெற்றி அடைந்திருப்பது, ரொஸடொம் குழுவினரின் மிகப்பெரிய சாதனை என அந்த நிறுவனம் கூறியுள்ளது. அணுமின் நிலைய அமைப்புகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு, மின் திறன் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டதாகவும் ரொஸடொம் கூறியுள்ளது. (7)

## அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார்

### -ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு-



(டெஹ்ரான்)

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராகவிருப்பதாக, ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரௌஹானி தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அழுத்தங்களை நீக்குவதற்கும், மன்னிப்பு கோருவதற்கும் அமெரிக்கா முன்வரும் பட்சத்தில் பேச்சுவார்த்தை நடத்த தயாரென ஈரான் அறிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி நேற்று முன்தினம் புதன்கிழமை இவ்வறிவிப்பை விடுத்துள்ளதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்த நிலையிலேயே ஈரானின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அமெரிக்கா தமது சட்டவிரோத செயல்களுக்காக மன்னிப்பு கோரி, அழுத்தங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் பேச்சுவார்த்தை சாத்தியம் எனவும் ஈரான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (7)

## ...நல்வழியில் செயற்பட ...ம் அமைத்துத்தரப்படும்



...த்து முன்னாள் நீதித்துறை அமைச்சர் கூறுகையில், "மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகினர். ஐ.எஸ். பயிற்சி பெற்ற சிறுவர்களுக்கு ஆதரவு தருவது போல் இச்செயல் உள்ளது. இது மிகவும் சிக்கலானது மற்றும் ஆபத்தானது என கூறினார்.

எர்னாவின் இந்த திட்டம் குறித்து துணை ஜனாதிபதி அமித் ராஜா கூறுகையில், "எத்தனையோ ஐ.எஸ். குழந்தைகள் வழி தவறி உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் ஆதரவு அளிக்கப்பட வேண்டும். அநாதைகளுக்கும், தாயுடன் வாழும் குழந்தைகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆனால், குழந்தைகள் அனைவரையும் சமமாக நடத்திட வேண்டும் என்பதை உணர்கிறேன்" என்று தெரிவித்தார். (7)

## புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர்கள் பல்கலை. பேராசிரியராக முடியாது

### ஜப்பான் பல்கலை.தெரிவிப்பு

(டோக்கியோ)

புகைப்பிடிக்கும் பழக்கம் உடைய நபர்களை பேராசிரியர்களாக பணியமர்த்த மாட்டோம் என ஜப்பான் நாகசாகி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ஜப்பானில் அடுத்த ஆண்டு (2020) ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகிறது. இதையொட்டி அங்கு புகைப்பிடிப்பு பழக்கத்துக்கு எதிரான பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஜப்பானில் பள்ளிக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் வைத்திய சாலை வளாகங்களில் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புகைப்பிடிக்கும் பழக்கம் உடைய நபர்களை பேராசிரியர்களாக பணியமர்த்த மாட்டோம் என நாகசாகி பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.


அதே சமயம் பேராசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கும் நபர், பணியில் சேருவதற்கு முன்பாக புகைப்பழக்கத்தை நிறுத்திவிடுவேன் என உறுதி அளித்தால் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பல்கலைக்கழகத்தின் செய்தி தொடர்பாளர் யூசுகே தாகுகுரா கூறுகையில்,

"புகைப்பிடிக்கும் பழக்கமுடையவர்கள் கல்வித் துறைக்குப் பொருத்தம் இல்லாதவர்கள் என கிற முடிவுக்கு வந்துள்ளோம். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் 359 சுடர்கள் ஏற்றப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி!



(களுவாஞ்சிகுடி)

மட்டக்களப்பு, பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் சேனை அமைப்பினரால் தொடர் குண்டுத் தாக்குதல்களில் உயிர் நீத்த உறவுகளுக்கு 359 சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப் பட்டது.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் தற் கொலைக் குண்டுத்தாக்குதல் களால் மரணமடைந்த 359 அப்பாவி மக்களின் ஆத்ம சாந்தி வேண்டி களுவாஞ்சிகுடி பேருந்து தரிப்பிடத்தில் இந்த 359 ஈகச் சுடர்கள் ஏற்றப்பட்டு நேற்று முன்தினம் மாலை அஞ்சலி செலு த்தப்பட்டது.

இதன்போது கல்முனை விகா ராதிபதி சங்கரத்தினதேரர், களு வாஞ்சிகுடி சிவஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய பிரதம குரு வான சண்முக மயூரவதன குரு க்கள், ஒந்தாச்சிமடம் சிமர்னா தேவாலயத்தின் அருட்தந்தை சுனில், பொதுமக்கள், பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் சேன்னை அமைப்பினர், களுவாஞ்சிகுடி பொலிஸார் உள்ளிட்ட பலர் இதன்போது கலந்துகொண்டி ருந்தனர்.

இதில் கலந்துகொண்ட மும் மதத் தலைவர்களும், குண் டுத்தாக்குதலின் போது உயி ரிழந்த உறவுகளுக்காக வேண்டி பிரார்த்தனை செய்ததோடு, மூவ ரும் இணைந்து பொதுச் சுடர் ஏற்றியதுடன், கலந்து கொண்ட ஏனையோர் ஏனைய சுடர்களை ஏற்றி மௌன அஞ்சலியும் செலு த்தினர். (இ-7)

# கொழும்புச் சிறைச்சாலைகளுக்கு கடற்படையினர் விசேட பாதுகாப்பு



(கொழும்பு)


**தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங் களையடுத்து கொழும்பிலுள்ள சிறைச் சாலைகளின் பிரவேசப் பாதைகளில் கடற்படையினர் விசேட பாதுகாப்பு நட வடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது**

இதன்படி, வெலிக்கடை சிறைச்சாலை, வெலிக் கடை. சிறைச்சாலை வைத்தியசாலை, மகஸின் சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச் சாலை என்பவற்றுக்கே இவ்வாறு கடற்படையினர் பாதுகாப்புப் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு சிறைச்சாலைகளுக்கு மேலதிக பாதுகாப் பைப் பெற்றுத் தருமாறு கடந்த 22 ஆம் திகதி சிறைச் சாலைகள் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த வேண்டுகோளின் பேரில் இவ்வாறு கடற்படையினர் விசேட பாதுகாப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# பேராயர் மல்கம் ரஞ்சித்-கோத்தா சந்திப்பு



(கொழும்பு)

கொழும்பு பேராயர் கர் தினால் மல்கம் ரஞ்சித் ஆண் டகையை முன்னாள் பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சந்தித்துக் கலந்துரை யாடியுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி உயிர்ப்பு ஞாயிறு தினத்தில் நாட்டின் பலபாகங்களிலும் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் குறித்த கவலையான தருணங்கள் குறி த்து இருவரும் கலந்துரையாடி யுள்ளனர்.

குறித்த தற்கொலை தாக்கு தலையடுத்து தற்போதைய நிலைமை தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள் ளது.

நாட்டின் 8 இடங்களில் மேற் கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் இது வரை 350 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காய மடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 48 வெளி நாட்டவர்கள் உயிரிழந்துள்ள துடன் 40 இற்கும் மேற்பட்ட சிறு வர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விந்தைச் செடிகள்

பேராசிரியர் தங்ஸ்டன் (Professor Dunstan). இவர் ஒரு ஆங்கில அறிவியல் வல்லுநர்.

இவர் ஒரு தடவை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு காட்டு வழியாக போய்க்கொண்டிருந்தார். அமெரிக்காவின் நடுப்பகு தியிலுள்ள காடு அது.

அவருடன் அவரது நாயும் போய்க் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் திடீரென ஒரு அலறல் சத்தம் கேட்டது! அது அவரது நாய்க்குட்டியுடைய சத்தம்தான். பேராசிரியருக்கு ஒன்றும் புரிய வில்லை!

எந்தத் திசையிலிருந்து சத்தம் வந்தது என்று பார்த்தார். அந்தத் திசையில் வேகமாக நடந்தார்.அங்கு போய் பார்த்தால் அவருக்கு பெரிய அதிர்ச்சி ஒன்று காத்துக் கொண்டிருந்தது! என்ன தெரியுமா?

ஒரு செடி அந்த நாய்க்குட்டியை கவ்விப் பிடித்துக் கொண்டி ருந்தது. அந்தப் பிடியிலிருந்து தப்பிக்க முடியாமல் நாய்க்குட்டி அலறிக் கொண்டிருந்தது. கறுப்பாக இருந்த அந்தச் செடி பசைத் தன்மை உள்ளதாக இருந்தது. அந்தச் செடியுடைய உணர்வுக் கொடுக்கு தான் நாயைப் பிடித்துக் கொண்டிருந்தது. பேராசிரி யர் மிகவும் கஷ்டப்பட்டு அந்த செடியிடமிருந்து நாயைக் காப்பாற் றினார்.

அதன் பிறகு கொஞ்ச நேரம் கூட அங்கு நிற்கவில்லை! ஆராய்ச்சி எல்லாம் செய்தது போதும் என்று சொல்லி திரும்பி வந்துவிட்டார்.

பின்னர் விசாரித்த போது தான் தெரிந்தது அங்கே வாழு கின்ற காட்டு வாசிகளே இந்த மாதிரி செடிகளை அங்கு வைத் திருக்கின்றார்களாம்! இந்த செடி விலங்குகளை மட்டும் தான் என்று இல்லாமல் மனிதரையும் பிடிக்குமாம்! இது ஒரு பேய்ச் செடிகள் என்று தான் சொல்ல வேண்டும். அதனால் தான் பேய்க்கன்னி என்று இதற்குப் பெயர் வைத்திருக்கின்றார்கள் அதாவது **Devils Noose!** பனிச்செடி என்று ஒன்று! **Sundew palnt! Drossera** என்று பெயர்! ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற சதுப்பு நிலப் பகுதிகளில் இந்த வகைச் செடி நிறைய உண்டு!

இது புழு பூச்சிகளையெல்லாம் உயிருடன் பிடித்து சாப்பிடு கின்றது. பூச்சி இலையிலே இருந்தால் போதும் அதில் உள்ள பசை நீரிலே மாட்டிக்கொள்ளும்! உடனே இலையில் இருக்கின்ற **Teutacles** அதாவது உணர்ச்சிக் கொடுக்குகள் பூச்சியைக் கெட்டியாகப் பிடித்திருக்கும்! பூச்சி துள்ளினால் மற்ற இலையும் கொடுத்து கெட்டியாக மூடிக்கொள்ளும்!

பூச்சியை முழுவதும் சாப்பிடும் வரைக்கும் இலை பிரிவதி ல்லை. துருத்திச் செடி என்று ஒன்று **Bladder woot Utricularia!**

இது ஒரு சன்னமான செடி. குளத்திலே மிதந்து கொண்டி ருக்கும். இலையில் ஒரு பகுதி சின்ன பை மாதிரி இருக்கும் ஒவ்வொரு பைக்கும் ஒரு கதவு உண்டு. அது உள்புறமாக மறைந்து இருக்கும். பூச்சி உள்ளே போனால் அவ்வளவுதான்! வெளியே வர முடியாது பூச்சியைக் கொன்று அதனுடைய சாற்றை அருமையாக உறிஞ்சி சாப்பிட்டுவிடும் இந்தச் செடி.

அசாம் காடுகளில் ஒரு வகைச் செடி உண்டு **Neperrnthes** அல்லது **Pitcher plant** என்று பெயர். தமிழில் தாளிச் செடி என்று சொல் லலாம். இதனுடைய இலை நிலக்கடலை மாதிரி ஒரு கூடா இருக்கும். அதிலும் ஒரு கதவு உண்டு. வாசனையிலே மயங்கிப் பூச்சி உள்ளே போய்விடும். அவ்வளவு தான் உள்ளே இதைச் செரிக்க வைக்க செரிமான நீர் **Digestive fluid** தயாராக இருக்கு அடுத்த விநாடியே பூச்சி செத்து விடும்.

இடுக்கிச் செடி என்று ஒன்று **Diones** என்று பெயர். இலை அழகாக இருக்கும். இலை ஓரம் பல் மாதிரி இருக்கும். பிணைப் பதற்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு இலையின் நடுப்பகுதி யிலும் ஆறு உணர்வு இழைகள் உண்டு. இதில் ஏதாவது ஒரு இழையைத் தொட்டால் போதும் திடீரென இலை மூடிக் கொள் ளும். அவ்வளவு தான் பூச்சியைக் கொன்று சாப்பிட்டு விடும்.

ஆபிரிக்காவிலே 'மணந்து கொல்லி' என்று ஒரு செடி **Ara ugia albens** வெள்ளைப் பூ பூக்கும்/ வாசனையாக இருக்கும் பூச்சி ஆசையாக உள்ளே போய் தேனைக் குடிக்க முயற்சி செய்யும். அதற்குள் செடி பூச்சியை சாப்பிட்டு விடும். அவுஸ்தி ரேலிய விவசாயிகள் அவர்கள் பழத் தோட்டத்திலே இந்த செடியைப் பயிரிடுவார்கள். செடிகள் விலங்குகளையும் பிடிக்கி ன்றது சரி மனிதனைப் பொறுத்த வரைக்கும் அவன் இன் னொரு மனிதனைப் பிடிப்பதற்கு எப்பவும் தயார். கொடுப்பதற் குத் தான் யோசிப்பானே தவிர பிடிப்பதற்கு யோசிக்கமாட்டான்.

ஒரு கஞ்சன் ஆற்று வெள்ளத்தில் போய்க் கொண்டிருக் கின்றான். கரையிலே இருக்கின்ற ஒருத்தன் அவனைக் காப்பாற்ற முயற்சி செய்கின்றான். கஞ்சனைப் பார்த்து உன் கையைக் கொடு என்று கத்தினார். அவன் கொடுக்கவில்லை கஞ்சனுக்கு எதையும் கொடுத்து பழக்கமில்லை அதனால் கையைக் கொடுப் பதற்கும் மனது வரவில்லை. ஆற்றுடன் போய்க் கொண் டிருந்தான்.

கரையிலே இருக்கின்றவன் யோசித்து சரி என் கையைப் பிடி என்று சொன்னான். கஞ்சன் உடனே கையைப் பிடித்துக் கொண்டான் உடனே இவன் இழுத்து கரையிலே போட்டு விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் அமைப்பின் ஊடாக தேசியத்தை ஒன்றிணைத்தாலே தீர்வு

## அரசிற்கு சம்பந்தன் அறிவுரை

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்கு தலின் பின்னணியில் சர்வ தேச தொடர்புள்ளதா? இலங்கையை ஏன் தாக்கத் தீர்மானித்தார்கள்? இன ரீதியில் நாம் அனைவரும் பிளவு பட்டுள்ள காரணத்தை பயன்படுத்தியும், அரசியல் ரீதியாக எம்மத்தியில் பிளவுகள் காணப்படுவதை அறிந்து கொண்டும் இந்தத் தாக்குதல் கள் இடம்பெற்றுள்ளனவா? என்ற கேள் விகளுக்கு அரசாங்கம் பதில் கூறவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் புதிய அரசியல் அமைப்பின் மூலமாக தேசியத்தை ஒன்றிணைத்தால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

இப்போதும் மகிந்த ராஜ பக்ஷ அணியினர் இந்த சம்பவங்களை பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற மட்டுமே நினைக்கின்றார்கள்.

நீங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைத்தும் சரியாகும் என நினைக்கின்றீர்கள். அவ்வாறு இருக்காது. முதலில் புதிய அரசியல் அமைப்பை கொண்டு வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 21 கைக்குண்டுகள், வாள்களுடன் கொழும்பில் நேற்று மூவர் கைது

(கொழும்பு)


கொழும்பு மோதரை பிரதேசத்தில் 21 கைக்குண்டுகள் மற்றும் 6 வாள்களுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் மற்றும் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் இணைந்து நடத்திய தேடுதலில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த கைக்குண்டுகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சிறிய அளவில் வெடிக்கக் கூடியவை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)

## நீதிமன்ற வளாகத்திற்கு அருகில்

# கம்பஹாவில் குண்டுவெடிப்பு




(கம்பஹா)

கம்பஹாவில் நேற்று முற்பகல் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூகொட நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

தாக்கம் குறைந்த குண்டு வெடித்தமையால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள காணி ஒன்றில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ரணில்-தெரேசா மே கலந்துரையாடல்

# குண்டுத் தாக்குதல் விசாரணைக்கு உதவ இலங்கைக்கு வருகின்றது பிரிட்டன் குழு

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் தெரேசா மே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது குண்டுத்தாக்குதல் காரணமாக ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் தனது அனுதாபத்தை பிரித்தானியப் பிரதமர் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு பிரித்தானியாவின் உதவியை வழங்க தயார் என்றும் இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரித்தானியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு உதவும் நோக்கில் பிரித்தானியாவின் விசேட குழுவொன்று இலங்கைக்கு வருகை தருவதற்கு ஏற்பாடாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலங்கையில் தாக்குதல் நடத்திய

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு அனானி குழு எச்சரிக்கை

(லண்டன்)

இலங்கையில் குண்டுத் தாக்குதல் நடத்திய ஐ.எஸ்.தீவிரவாதிகளை எச்சரித்து, அனானி என்ற சர்வதேச இணைய முடக்கல் குழு செய்தி அனுப்பியுள்ளதாக சர்வதேச ஊடகங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆங்கிலத்தில் அனோனிமெஸ் என்று அறியப்படும் இந்தக் குழு வெளியில் புலப்படாமல் செயற்படுவதால், அநாமதேயமான குழு என்று அறியப்படுகிறது.

அனானி என்று தமிழில் பெயர்படுத்தப்படும் இந்தக் குழுவை பல்வேறு தரப்பினரால் இணைய வழி தீவிரவாதிகள் என்று விமர்சிக்கின்ற போதும், உலகெங்கிலும் இந்த குழுவுக்கு ஆதரவாளர்கள் பெருகி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ரைம்ஸ் இதழ் இந்தக் குழுவினரை உலகில் மிகவும் அதிகாரச் செல்வாக்கு மிகுந்த 100 பேருக்குள் இணைத்திருந்தது.

இலங்கையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை எச்சரிக்கும் வகையில் தகவல் அனுப்பியுள்ள அனானி குழு, ஐக்கியப்படுவதற்கான காலம் வந்திருப்பதாகவும், ஒன்றிணைந்து போராட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 90 | 50 |
| தக்காளி | 60 | 60 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 110 | 80 |
| கோவா | 80 | 50 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 50 | 30 | 30 | 40 |
| புடோல் | 80 | 100 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 40 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 120 | 120 | 170 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 140 | 80 | 80 | 50 | 120 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 150 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — | 20 | 40 |
| கீரை-1பிடி | 40 | 25 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 200 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 280 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | 100 | 80 |

## தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த

# சட்டம் ஒழுங்கு அமைச்சை பொன்சேகாவிடம் வழங்குங்கள்

## திகாம்பரம் வலியுறுத்து





(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சை சரத் பொன்சேகாவுக்கோ அல்லது சம்பிக்க ரணவக்கவுக்கோ வழங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் பழனி திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு படிக்காத இளைஞர்களைப் பயன்படுத்தியே குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டது.

ஆனால் இப்போது படித்த, பணம் படைத்தவர்களை பயன்படுத்திக் கொண்டே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது ஆபத்தானதாகும். அதனால் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி பயனில்லை. ஒருவருக்கொருவர் விரல் நீட்டாமல் இணைந்து செயற்படுவதன் மூலமே இதற்கு முகம்கொடுக்க முடியும்.

அரசாங்கம் என்ற வகையில் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும். இந்திய புலனாய்வுத் தகவல் கடந்த 4 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில் எமக்கு தெரியாது என கூற முடியாது. நாட்டின் தலைவரான ஜனாதிபதியும் தெரியாது என்கின்றார்.

அப்படியென்றால் யாருக்கு இந்த தகவல் சென்றது என்ற பிரச்சினை இருக்கின்றது. பொலிஸ் மா அதிபருக்கும் பாதுகாப்பு செயலாளருக்கும் அந்த தகவல் சென்றுள்ளதாகவே கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் தாக்குதல் சம்பவத்தில் 350 இற்கும் மேற்பட்டோர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் மலையக மக்கள் ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்ததில்லை. நானும் ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்ததில்லை. அதனால் சட்டம் ஒழுங்கு தொடர்பில் நடவடிக்கை எடுக்க இந்த பக்கத்தில் திறமையானவர்கள் இருக்கின்றனர்.

சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவியை சரத் பொன்சேகாவுக்கோ அல்லது பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கோ வழங்க வேண்டும். இந்த நேரத்தில் சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் படிமுறைமைகளும் பகுதி-II

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

11



1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபன நோக்கத்திற்காக தேவைப்படும் அரசின் எந்தவொரு அசைவற்ற ஆதனத்தையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற கட்டளை மூலம் அக் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையளிக்கப்படல் வேண்டும் ஏற்பாடுகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த கட்டளை அக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்துக்கும் பொறுப்பாயுள்ள அமைச்சரினால் வழங்கப்பட வேண்டும். (land manual )

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்றுக்கு முடிக்குரிய காணி ஒன்றைப் பெற்றுக் கொடுத்தலுக்காக அரசாங்க அதிபரிடம் / பிரதேச செயலாளரிடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்திருக்கையில் கூட்டுத்தாபனம் அல் லது குறிப்பிட்ட சபையினால் தயாரிக்கப்பட்ட விளக்கமான நில அளவை சுவடு வரைதலுடனும் வர்த்தமானி அறிவித்தலுடனும் அரச அதிபர் /பிரதேச செயலாளர் தமது சுய விதப்புரையுடன் கூடிய அறிக்கையை காணி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

காணி ஆணையாளர் நாயகம் தமது விதப்புரையை காணி அமைச்சருக்கு அனுப்பி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அதனைப்பற்றி சம்பந்தப்பட்ட அரச அதிபருக்கு /பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். அரசாங்க அதிபர் / பிரதேச செயலாளர் அதனைக் குறிப்பிட்ட சபைக்கோ கூட்டுத்தாபனத்துக்கோ அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் சபை அல்லது கூட்டுத் தாபனத்துக்குப் பொறுப்பான அமைச்சருடைய கைச்சாத்துடன் பகிரங்கப்படுத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி பராதீனப்படுத்தப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் பராதீன கட்டளையொன்று பிறப் பிக்கப்பட மாட்டாது. (land manual)

**28. 1992 ஆண்டின் இல. 33 சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம்** (Mines and Mineral, Act, No. 33 of 1992)

**புவி சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்**

1903ஆம் ஆண்டு கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்களின் தலைமையில் இலங்கை கனிம ஆய்வு நிறுவனம் (MSC) ஆரம்பிக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டில் கனிம ஆய்வு நிறுவனமானது கனிம விஞ்ஞான திணைக்களமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் இது 1962இல் புவிச்சரிதவியல் திணைக்களம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

புதிய திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட புதிய பொறுப்புக்களுடன் புவிச்சரிதவியல் திணைக்களமானது 1992ஆம் ஆண்டு 33ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் மூலம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி புவி சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாட்டில் உள்ள கனிப்பொருள் வளங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளுதல், அவற்றை இனங்காணுதல் மற்றும் மேம்படுத்தல் போன்ற விடயங்களில் இந்த திணைக்களத்தினால் வரலாற்றுக் காலமாக மிகவும் விசேடமான சாதனை படைக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நடைமுறையிலிருக்கும் கனிப்பொருள் தொடர்பான வர்த்தகங்கள் அனைத்தும் இதற்கு சான்றாக உள்ளன.

புவிச்சரிதவியல் தொடர்பான கருத்திட்டங்கள், சேவைகளை வழங்குதல் புவிச் சரிதவியல், புவி இரசாயனவியல், புவி அதிர்வு அவதானிப்பு நடவடிக்கைகள் மற்றும் சுனாமி எச்சரிக்கை விடுத்தல் புவிச்சரிதவியல் தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் சேவைகள் பற்றி கொள்கை வகுப்பாளர்களுக்கும், சமூகத்திற்கும் வழங்கல்கள், சூழலியல் செழிப்புத் தன்மை என்பவற்றினை உறுதி செய்து நாட்டிலே காணப்படும் கனிய வளங்களை பொருளாதார அபிவிருத்திக்காக மேம்படுத்தல் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல் என்பன புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிரதான பணிகளாகும்.

சீமெந்து, பீங்கான் பொருட்கள், கனிப் பொருட்கள், மணல், உரம், செங்கற்கள், ஓடுகள், அளவைக் கற்கள் போன்ற கனிமங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்கள் பற்றிய ஆய்வுகள் இந் நிறுவனத்தினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

**1992 ஆம் ஆண்டின் இல. 33 சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம் (சட்டத்திருத்தம் 2009ஆம் ஆண்டின் இல.66)**

1958 ஆம் ஆண்டின் இல. 15 சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம் திருத்தப்பட்டு 1992 ஆம் ஆண்டில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டம் இல. 33 உருவாக்கப்பட்டது. இச் சட்டம் 2009இல் மீண்டும் திருத்தப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தை நிறுவி அதனூடாக கொள்கை திட்டமிடுபவர்களுக்கும், மக்களுக்கும் புவிச்சரிதவியல் தொடர்பான தகவல்களையும் ஆலோசனைகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் சூழல் ரீதியில் நீடித்து நிலைத்திருக்கக்கூடியவாறு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக நாட்டின் கனிப்பொருட்களையும் வளங்களையும் முகாமைத்துவம் செய்தல், அதனை மேம்படுத்துதல் மற்றும் கனிப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகள், பெறுமதி சேர்த்தல், போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை நடைமுறைப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

**சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்துடன் [illegible] சம்பந்தமான விடயங்கள்**

பொதுவாக எத்தகைய அரச காணிகளிலும் சுரங்கம் தோண்டும் உரிமையை அரசிடம் வைத்துக் கொண்டு அரசினால் வழங்கப்பட்டுள்ள காணியொன்றில் சுரங்கம் தோண்டுதலும் இரத்தினக்கற்கள் அகழ்தலுக்குமான உரிமையை விற்பனை செய்ய அல்லது குத்தகை கொடுக்க அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் 2(6) ஆம் பிரிவிற்கேற்ப ஜனாதிபதியானவருக்குத் தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அரச காணியொன்றில் அல்லது அரசினால் பராதீனப்படுத்தப்பட்ட காணியொன்றில் இரத்தினக்கற்கள் அகழ்தலுக்கான உரிமை விற்பனை செய்வதற்காக தத்துவமானது தற்போது முழு அளவிலாக 1971 இன் 13 ஆம் இலக்க அரச இரத்தினக்கற்கள் கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே அத்தகைய காணிகளில் இரத்தினக்கற்கள் அகழ்தலுக்கான உரிமை பற்றிய பிரச்சினைகள் அனைத்தும் இதன் பின்னர் இதுவரை கடைப்பிடிக்கப்பட்டது போன்று காணி ஆணையாளர் நாயகத் திற்கு அன்றி அரச இரத்தினக்கற்கள் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

இதன் பின்னர் தரப்பட்டுள்ள அறிவுரை இரத்தினக்கற்கள் அகழ்தலுக்கான உரிமை தொடர்பில் ஏற்புடையனவாகாது. எனினும் அரச காணியில் மாணிக்கக்கல் அகழ்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கு முன் அரச மாணிக்கக்கல் கூட்டுத்தாப னத்தினால் அரச அதிபரை / பிரதேச செயலாளரை கேட்க வேண்டும். அவ்வாறே அரச காணியை மாணிக்கக்கல் அகழ்வதற்காக ஏலத்தில் விடுமுன் அக்காணி அரச மாணிக்கக்கல் கூட்டுத்தாபனத்தினால் அரசாங்க அதிபரிடம் இருந்து/ பிரதேச செயலாளரிடமிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். தேவையான வேளைகளில் அரச அதிபர்/ பிரதேச செயலாளர் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். (land manual)

உரித்தளவில் பற்றிய தகுதியான பதிவேடொன்று வேறு வகையில் குறித்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடப்பட்டிருந்தாலொழிய அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியொன்று வழங்கப்பட்டுள்ள மாத்திரத்தில் அக் காணியின் மேல் அல்லது கீழ் உள்ள எத்தகைய கனியத்திற்கோ அல்லது கனிப்பொருளுக்கோ ஆன உரித்து கையளிக்கப்படுவதில்லை என அரச காணி கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு வேறு வகையில் குறித்துரைத்து வெளியிடப்பட்டிருந் தாலும் அரச காணியொன்று வழங்கப்பட்டிருந்த போதும் அதிலுள்ள கனிமங்கள் அனைத்தும் அக் கனிப்பொருட்களும் பெற்றோலியம் முழுவதும் அரசுக்குச் சொந்தமான சொத்துக்கள் என வெளியிடப்பட்டுள்ளன.

கனிமம் பற்றிய உரிமையானது 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்களும் கனிப் பொருட்களும் சட்டத்தின் கீழ் இப்போது கையுதிர்க்கப்பட்டுள்ளது.

> ஏதேனும் காணியொன்றில் கனிப்பொருட்கள் அகழ்தல் உண்டாவென தேடிப்பார்த்தல். சேகரித்தல். வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திடம் உரிமம் ஒன்றினைப் பெறுதல் வேண்டும்

ஏதேனும்காணியொன்றில்கனிப்பொருட்கள் அகழ்தல் உண்டாவென தேடிப் பார்த்தல், சேகரித்தல், வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திடம் உரிமம் ஒன்றினைப் பெறுதல் வேண்டும்.

பராதீனப்படுத்தப்படாத அரச காணிகளில் கனிப்பொருட்கள் உண்டாவென தேடிப் பார்ப்பதற்கும் கனிப்பொருட்கள் அகழ்தலுக்கும் பெறுவதற்கும் உரிமம் வழங்குவதற்கும் முன்னர் புவிச் சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணிப்பாளர் நாயகமானவர் காணி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் சம்மதத்தைப் பெறுதல் வேண்டும்.

ஆகவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்க அதிபரானவர் /பிரதேச செயலாளர் தனது அவதானிப்புக் களையும் விதப்புரையையும் கொண்ட அறிக்கையொன்றை காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். (land manual)

**29. வனப் பாதுகாப்புத் திணைக்களம்**

அரசாங்கத்திடம் காணப்படும் வன வளங்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு வன பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வனவியலுடன் தொடர்புடைய சட்டங்களை மற்றும் பல்வேறு விதமான் ஒழுங்கு விதிகள் என்பன பல்வேறு சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வன கட்டளைச்சட்டம், தேசிய மரபுரிமைகள் வன பூமி சட்டம், வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் என்பன அரசாங்கத்திற்குச் சொந்தமான வனங்களின் முகாமைத்துவத்திற் காக சட்டரீதியான ஏற்பாடுகளை வழங்குகின்ற மிகமுக்கிய ஆவணங்க ளாகும்.

வனக் கட்டளைச் சட்டம் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், வன ஒதுக்குப் பிரதேசங்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1885 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வன கட்டளைச் சட்டம் முதலாவது வன கட்டளைச் சட்டமாக காணப்படுகின்றது.

இதன் மூலம் மரங்களை வெட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் என்பன கட்டுப்படுத்துவது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

231



அநகாரிக தர்மபால

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

த மோணிங் ஸ்ராரும் இந்து சாதனமும், இந்தத் தகவல்களை தமிழர் மத்தியில் பரப்புவதில் முக்கியமான பாத்திரத்தை வகித்தன. அன்ரனி ஸ்மித் குறிப்பிடுவது போல்,

தேசியவாதத்திற்கான ஊடகம் முதலில் செய்திப் பத்திரிகையாகவும் பின்னர் வானொலி தொலைக்காட்சியாகவும் இருந்தது. தேசியவாதத்தின் எழுச்சிக்கும் உள்ளூர் பத்திரிகைத் துறையின் செழிப்புக்கும் ஓரளவு ஒழுங்கான இணைத் தொடர்பு உள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### தமிழ், சமூக அரசியல் அமைப்புக்கள்

ஒரு தேசத்தின் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்புக்கள், அரசியல் அமைப்புக்களின் முன்னோடிகளாக அமையும் பாங்கைக் கொண்டுள்ளன. எனவே தமிழ் சமய, கலாசார, மொழி என்பனவற்றை வளர்க்கும் சங்கங்களும் பொருளாதார வர்த்தக அமைப்புக்களும் (இவற்றையிட்டு இதற்கு முந்திய அத்தியாயத்தில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.)

அநேகமாக பத்தொன்பதா வது நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தமிழ் அரசியல் அமைப்புக்கள் தோன்றக் காரணமாக இருந்துள்ளன.

இந்திய தேசியக் காங்கிரசும், தென்னிந்திய திராவிட இயக்கங்களும் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ் அரசியல் இயக்கங்கள் உருவாவதற்குப் பாரிய பங்கை அளித்துள்ளன.

சைவ பரிபாலன சபை, இந்து மகா சபை, தமிழ்ச் சங்கம் என்பன சமய, கலாசார, மொழி ஆகியவற்றின் காரணமாக உருவாக்கப்பட்ட போதிலும் அவை தமிழ் அரசியல் அபிவிருத்திக்கான ஆர்வங்களிலும் ஓரளவு கவனம் செலுத்தியுள்ளன. ஆயினும் இவை தமிழ் அரசியல் பிரச்சினைகளுக்காக எப்போதுமே முழுமையாகப் பேசியதில்லை.

தமிழரின் சமூக அரசியல் முன்னேற்றத்தின் நலன் கருதி யாழ்ப்பாணச் சங்கம் 1905 இல் உருவாக்கப்பட்டு ஏனைய தமிழ், சமூக, அரசியல் அமைப்புக்களின் முன்னோடியாக விளங்கியது. 1906 இந்து ஒகனில் இந்தச் சங்கத்தின் பிரதான நோக்கம் பின்வருமாறு கூறப் பட்டது.

தமிழ் மக்கள் அனுபவித்து வரும் குறைகளை அரசாங்கத்தின் முன்வைத்து அவற்றைத் தீர்க்கும் முகமாக இங்கு யாழ்ப்பா ணத்தில் ஒரு சங்கம் நிறுவப்படல் வேண்டுமென்பது பலரின் நீண்டகால விருப்பமாக இருந்துள்ளது.

இந்த விருப்பம் ஒரு வழியாக நிறைவேறியது எமக்குப் பெரு மகிழ்ச்சியை அளிக்கின்றது. கடந்த டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதியன்று பல தேசாபிமானிகள் ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணச் சங்கத்தை உருவாக்கியுள்ளனர்.

இச் சங்கம் பூரண ஒற்றுமையுடனும் முழுமனதோடும் சாதி சமய பாகுபாடுகளின்றிச் செயற்படுமேயானால் அரசியல் அரங்கத்தில் அது பெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் மாத்திரமின்றி எமது சமூக நிலையிலும் பெரும் நன்மைகளையும் கொண்டு வரும். ஒற்றுமையே பலம்.

இதே பத்திரிகை யாழ்ப்பாணத் தமிழர் சங்கம் என்னும் தலைப்பின் கீழ் தகவல்களைக் கொண்டிருப்பதுடன் அங்கத்தவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளது. கும்பகோணம் கல்லூரி முன்னாள் ஆசிரியர் ஜேம்ஸ் ஹென்ஸ்மன் தலைவராகவும் வழக்கறிஞர் ஹோமர் வன்னியசிங்கம், வழக்கறிஞர் எஸ். காசிப்பிள்ளை ஆகியோர் உப தலைவர்களாகவும் இருந்தனர்.

இச் சங்கம் பிரதானமாக தமிழர்களின் சமூக, அரசியல் அபிலாசைகளில் அக்கறை கொண்டிருந்தது என்பதை மேற்படி செய்தி தெளிவாகத் தெரிவிக்கின்றது. எந்தவொரு தனிப்பட்ட சமய, சாதி, நம்பிக்கை என்பவற்றிற்கு சலுகை வழங்காத வகையில் அங்கத்தவர்களை கொண்டிருத்தல் வேண்டும் என்பது அவர்களது மற்றைய பிரதான நோக்கமாக இருந்தது.

ஆயினும் இச் சங்கத்தின் நிர்வாகக் குழுவினர் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். இச் சங்கம் உரு வாக்கப்பட்ட காலத்திலிருந்தே மேலும் அரசியல் அதிகாரத்தைப் பெறும் முகமாக அரசியலமைப்பு சீர்திருத்தப்பட வேண்டுமென இடைவிடாது போராடியது.

1921 இல் பிரதான தமிழ் அரசியல் அமைப்பான தமிழர் மகாஜன சபை தோற்றுவிக்கப்படும் வரையில் இது நிகழ்ந்தது. தமிழருக்கு அளித்த வாக்குறுதிகளை சிங்கள உயர்மட்டத்தினர் மீறிவிட்டனர் என உணர்ந்த தமிழர் அவர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணத்தினால் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறி இந்த அமைப்பை உருவாக்கினர்.

1906 ஆம் ஆண்டு இன்னுமோர் அமைப்பான சமூக சீர்திருத்தச் சங்கமும் யாழ்ப்பாணத்தில் இதே ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் அமைக்கப்பட்டது.

இச் சங்கம் தமிழ் கலாசாரப் பாரம்பரியங்களை மேம்படுத்துவதில் அதிக கவனஞ் செலுத்திய போதும் அது தமிழ் அரசியல் பிறநாட்டு இறக்குமதியையும் மேற்கத்தேய கலாசாரமயமாதலை எதிர்ப்பதிலும் அரசாங்கத்தின் தலைவரி மரண தண்டனை என்பனவற்றுக்கு எதிராகப் போராடுவதிலும் ஈடுபட்டது.

இந்த அமைப்பு ஆரம்பத்தில் அதன் முதல் தலைவர் ஆனந்த குமாரசுவாமியினால் நிறுவப்பட்ட இலங்கை சமூக சீர்திருத்தச் சங்கத்தின் சகோதரச் சங்கமாக இணைந்திருந்தது. கோப்பாயைச் சேர்ந்த சமாதான நீதவான் ஏ.மயில்வாகனம் இதன் முதல் தலைவராக இருந்தார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### தாக்குதல் நடத்தியவர்களுக்காகவும் பிரார்த்தனை

# கிறிஸ்தவர்களால் முஸ்லிம்களுக்கு இலங்கையில் ஆபத்து ஏற்படாது

## கர்தினால் ரஞ்சித் உறுதி

(கொழும்பு)

**கிறிஸ்தவர்களால் இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது என்பதை உறுதிபடக் கூற முடியும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். மதத்தின் பெயரால் தாக்குதல் நடத்தி வன்முறைகளில் ஈடுபடும் நபர்கள் எந்தவொரு மதத்தையும் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.**



இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் கர்தினாலை சந்தித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு மதத்தையும் பின்பற்றும் நபர்களால் இவ்வாறான கொடூரத் தாக்குதல்களை முன்னெடுக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிணைப்பு மிகவும் வலுவானது எனவும் நீண்ட காலமாக இந்தப் பிணைப்பு காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் இஸ்லாமிய முறைப்படி தாக்குதல் நடத்தியதாக கூறினாலும் இந்த எதுவும் இஸ்லாமிய மார்க்கத்தின் வழி அல்ல எனவும் கர்தினால் தெரிவித்துள்ளார்.

எம்மீது தாக்குதல் நடத்திய தரப்பினருக்காகவும் நாம் பிரார்த்தனை செய்கின்றோம் எனவும், இஸ்லாமிய மக்கள் மீது நாம் கைதூக்கிவிடக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தீவிரவாத இயக்கங்கள் உருவாவதற்கு நாமும் ஓர் வகையில் காரணம் எனவும், சமூகத்தில் காணப்படும் பல்வேறு ஏற்றத்தாழ்வு நிலைமைகளே இந்தத் தீவிரவாதத்தைத் தூண்டுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மக்களின் கண்ணீருக்கு மத்தியில் உறவுகளின் இறுதிக் கிரியைகள்



(கொழும்பு)

ஈஸ்டர் தினத்தன்று கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் உட்பட கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகள் கட்டம் கட்டமாக நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் கொழும்பு மாதம்பிட்டிய பொது மயானத்தில் எட்டுப் பேரின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன. (இ-7)

# குண்டுவெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஞாயிறன்று விசேட தியான நிகழ்வு

இலங்கையிலுள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்கள், அண்மையில் நாட்டின் பல்வேறு பாகங்களில் நடைபெற்ற பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விசேட தியான நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளன.

இந்நிகழ்வில் நாங்கள் ஆத்மாக்களுக்கு அமைதியைத்தானமளிப்போம். 28-04-2019 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி முதல் 7.30 மணிவரை எமது நிலையங்களில் நடைபெறும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பொதுமக்களை நாம் அன்போடு அழைக்கின்றோம்.

உங்கள் பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களை அறிந்து கொள்ள www.brahmakumaris.lk என்ற இணையத் தளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு:-011 2717572 என்ற தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1703

### ராம்




### சரண்




### கிசோர்




### ஜெசி




### ஜனந்தன்




### விஷ்வா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் க.பொ.த.(சா/த) பரீட்சை 2018 பெறுபேறுகள் -ஓர் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இலங்கையில் தமிழ்ப் பெண் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதனால் இப்பாடசாலையின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் எவ்வாறு உள்ளனவென அறியப் பாடசாலை சமூக கல்வியாளர்கள், பொதுமக்கள் மிகவும் கரிசனை கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

இலங்கையில் தமிழ்ப் பெண்கள் கல்வியில் இப் பாடசாலைப் பெறுபேறுகளில் பெரும்பங்கை வகிக்கிறது. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலை, வெள்ளவத்தை இந்து மகளிர் வித்தியாலயம், பம்பலப்பிட்டி, இராமநாதன் மகளிர் வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் தமிழ் மகளிர் வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச இந்து மகளிர் கல்லூரி, திரு கோணமலை சண்முகா வித்தியாலயம் ஆகியன இன்று தமிழ் மொழிமூலம் நல்ல பெறுபேற்றைத் தரும் பாடசாலைகளாக இருக்கின்றன. முன்னர் நல்ல பெறுபேற்றைத் தந்த சில தமிழ் மகளிர் பாடசாலைகள் இன்று சோர்வுற்ற நிலையில் காணப்படுவது கவலை தருவதாக இருக்கின்றது.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இன்று 180 ஆவது அகவையை பூர்த்தி செய்து துடிப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ்ப் பெண் பிள்ளைகளின் கல்வியில் பெரும் பங்காற்றி வருகின்றது. 2018 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் இருந்து க.பொ.த. சா/த பரீட்சைக்கு 231 பரீட்சார்த்திகள் தோற்றினர். இவர்களுள் 231 பேரும் க.பொ.த. (உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 231 மாணவிகளுள் 299 பேர் க.பொ.த. (உ/த) கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர் என்பது மிகவும் பாராட்டத்தக்கது. பரீட்சை எழுதிய மாணவிகளுக்கு 99.1 சதவீதத்தினர் க.பொ.த (உ/த) கணிதம், விஞ்ஞானம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சை எழுதிய 231 மாணவிகள் யாவரும் 6 பாடத்திலும் அதற்கு மேலும் சித்தி பெற்றுள்ளனர். எல்லா முறைகளிலும் எல்லா மாணவிகளும் க.பொ.த (உ/த) கற்கத் தகுதி கண்டுள்ளனர்.பரீட்சை எழுதிய 231 மாணவிகளின் மொத்த அடைவு மட்டத்தை A சித்தி எண் ணிக்கையில் நோக்கின். இவை பின்வருமாறு,

| Aகளின் எண்ணிக்கை | சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 9A | 50 |
| 8A | 49 |
| 7A | 34 |
| 6A | 31 |
| 5A | 18 |
| | 82 |

மொத்த 231 பரீட்சார்த்திகளில் 182 பேர் 5 ஏ இற்கு மேல் பெற்று பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். இது 78.78 வீதமாகும். பரீட்சை எடுத்த மாணவிகள் சராசரியாக 6A க்கு மேல் பெற்றுள்ளனர்.

231 பாடசாலைப் பரீட்சார்த்திகள் யாவரும் 9 பாடங்களுக்கும் தோற்றியுள்ளனர். 231×9= 2079 பரீட்சை அலகுகளுக்கு தோற்றியிருந்தனர். மொத்த 2079 பாட அலகுகளில் பெற்ற அடைவுகள் பின்வருமாறு,

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1485 | 71.43 |
| B | 336 | 16.16 |
| C | 213 | 10.25 |
| S | 41 | 1.97 |
| W | 04 | 0.19 |
| | 2079 | 100.00 |

ABC பிரிவுகளில் சித்தி பெற்ற பாட அலகுகளின் எண்ணிக்கை 2013 ஆக இருக்கின்றது. சித்திவிகிதம் 97.84 வீதமாகவும் இருக்கின்றது. மொத்தம் 2079 பாட அலகுகளில் நான்கு அலகுகளிலேயே சித்தி பெறத் தவறியுள்ளனர். ஆங்கிலம் ஒன்று, ஆங்கில இலக்கியம் இரண்டு, வர்த்தகமும் கணக்கியல் அலகு ஒன்றுமாக இருக்கின்றன.

231 மொத்த பரீட்சார்த்திகளில் 158 பேர் தமிழ்மொழி மூலமும் 73 பேர் இருமொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவிகள் பெற்ற அடைவு மட்டங்கள் வருமாறு,

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 990 | 69.62 |
| B | 224 | 17.16 |
| C | 148 | 10.41 |
| S | 36 | 2.53 |
| W | 04 | 0.28 |
| | 1422 | 100.00 |

இருமொழிப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பின்வருமாறு,

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 495 | 75.34 |
| B | 92 | 14.00 |
| C | 65 | 9.90 |
| S | 05 | 6.76 |
| W | -- | -- |
| | 657 | 100.00 |

இரு மொழிமூலம் 73 பேர் பரீட்சை எழுதினர். இவர்கள் எழுதிய பாட அலகின் மொத்தம் 73×9=657

தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவிகளின் பெறுபேறுகளிலும் இரு மொழி மூலம் தோற்றிய மாணவிகளின் பெறுபேறுகள் உயர்வாகவுள்ளன. தமிழ்மொழி மூலம் தோற்றிய மாணவிகள் நான்கு பாட அலகுகளில் சித்திபெறவில்லை என்பது A சித்தியில் 5.72 வீதம் குறைவாகவுள்ளது.

பாட அடிப்படையில் பெறுபேறுகளை நோக்கும் போது சமயங்களில் 231பேரில் 222 பேர் (91.10%), தமிழில் 205 பேரும் (88.74%), ஆங்கிலத்தில் 147 பேரும் (63.64%), கணிதத்தில் 178 பேரும் (88.74%), வரலாற்றில் 181 பேரும் (78.35%), விஞ்ஞானத்தில் 100 பேரும் (43.29%) A சித்தி பெற்றுள்ளனர்.

மற்றைய பாடங்களுடன் விஞ்ஞானப் பாடத்தின் பெறுபேறுகளை ஒப்பிடுமிடத்து விஞ்ஞான பாடத்தின் பெறுபேறு குறைவாக இருப்பது சற்றுக் கவலை தருவதாக இருக்கின்றது. மேலும் விஞ்ஞான பாடத்தில் 10 பேர் S சித்தி பெற்றுள்ளனர். இவர்கள் க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் கற்கத் தகுதியை இழந்துள்ளனர். ஆனால் கணிதப் பிரிவில் கற்கும் தகுதி இருக்கின்றது.

முதலாவது விருப்புப் பாடப் பிரிவில் வர்த்தகமும் கணக்கியல் பாடத்தை 210 பேர் எடுத்துள்ளனர். இவர்களுள் 118 பேர் A சித்தியையும் 47 பேர் B சித்தியையும் 35 பேர் C சித்தியையும் பெற்றுள்ளனர். 10 பேர் S சித்தியும் ஒருவர் சித்தி பெறவில்லை (W). புவியியல் பாடத்தை 16 பேர் எடுத்து பேர் A சித்தியையும் 6 பேர் B சித்தியையும் ஒருவர் C சித்தியும் பெற்றுள்ளனர். குடியுரிமைக் கல்வியும் ஆட்சியியலும் பாடத்தை 5 பேர் எடுத்து மூவர் A சித்தியையும் B, C பிரிவுகளில் தலா ஒருவர் சித்தி பெற்றுள்ளனர்.

இரண்டாவது விருப்புப் பாடப்பிரிவில் கர்நாடக சங்கீதம் 35 பேர் எடுத்து 33 பேர் A சித்தியும் 2 பேர் B சித்தியும் பெற்றுள்ளனர். சித்திரம் 7 பேர் எடுத்து இருவர் A சித்தி, மூவர் B சித்தி, இருவர் C சித்தி பெற்றுள்ளனர். 15 பேர் பரத நாட்டியத்தை எடுத்துள்ளனர். இவர்களுள் 66 பேரில் 16 பேர் A சித்தியும் 21 பேர் B சித்தியும் 24 பேர் C சித்தியையும் பெற்றுள்ளனர். ஆங் கில இலக்கியத்தை எடுத்த 64 பேர் சித்திபெற்றுள்ளனர். 93 பேர் தமிழ் இலக்கியத்தை எடுத்துள்ளனர். இவற்றுள் 66 பேர் A சித்தி பெற்றுள்ளனர். நாடக அரங்கியலை 13 பேர் எடுத்து 12 பேர் A சித்தியும் ஒருவர் B சித்தியும் பெற்றுள்ளனர்.

மூன்றாவது விருப்புப் பாடத்தில் 191 தகவல் தொடர்பாடல் பாடத்தை எடுத்து 152 பேர் Aயும் 19 பேர் Bயும் 9 பேர் Cயும் பெற்றுள்ளனர். விவசாயம், உணவுத் தொழில் நுட்பத்தை 35 பேர் எடுத்து இவர்களுள் 24 பேர் Aயும், 9 பேர் Bயும் 2 பேர் C சித்தியும் பெற்றுள்ளனர். ஊடகக் கல்வியை 4 பேர் எடுத்துள்ளனர். மேலும் சுகாதாரம் உடற்கல்வியை ஒருவர் எடுத்து அதில் A சித்தியைப் பெற்றுள்ளார்.

தொகுத்து நோக்குகையில் வேம்படி மகளிர் பாடசாலையில் க.பொ.த (சா/த) 2018 பரீட்சை பெறுபேறுகள் கடந்த வருடங்களிலும் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.இங்கு கல்வி பயிலும் மாணவிகள் புலமைப்பரிசில் பரீட்சை செய்து சித்திபெற்று அனுமதி பெற்ற மேற்திறன் மாணவர்களாக இருந்தாலும் 6-11 வரை 6 வருடங்கள் பாடசாலை ஆசிரியர்களினால் நன்கு வழிப்படுத்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பாடசாலையின் கல்வி விழுமிய கருத்துக்களும் மூத்த மாணவிகளால் முன்னெடுக்கப்படும் கல்வி சார்ந்த செயற்பாடுகளும் இளைய மாணவிகளுக்கு கல்வி மேம்பாட்டிற்கு உதவியாக அமைகின்றன. மேலும் மாணவிகளிடையே காணப்படும் அதீத போட்டி மனப்பான்மையும் கல்வி வளர்ச்சிக்கும் பரீட்சைப் பெறுபேறுகளுக்கும் உதவியாக இருக்கின்றன.

மேலும் பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம், இந்நாள் பதில் அதிபர் திருமதி லலிதாம்பிகை மகேஸ்வரன் மற்றும் துடிப்பான பழைய மாணவிகள் திருமதி சிறிரஞ்சினி ஆனந்தகுமாரசுவாமி, திருமதி சிவசக்தி மகேசன் ஆகியோரின் பங்கு மாணவிகளின் சிறந்த செயற்பாட்டுக்கு வழி வகுத்ததெனலாம். மேலும் பாடசாலை அபிவிருத்திச் சபையும் குறிப்பிட்ட சிலநலன்விரும்பிகளின் பங்களிப்பும் பாடசாலையின் மேம்பாட்டிற்கு உதவியாக உள்ளது. எனினும் தென்னிலங்கைப் பாடசாலைகள் சிலவற்றைப் போல் உச்ச நிலையை இன்னும் அடையவில்லை. வருங்காலத்தில் இப் பாடசாலை கொழும்பு விசாக்கா, தேவி பாலிக்கா, றோயல் கல்லூரி, கம்பஹா சீவாலி வித்தியாலயம் போன்ற முன்னணிப் பாடசாலைகளின் தரத்தை எய்த வேண்டும். இப்பாடசாலையில் இருந்து தேசிய ரீதியில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவிகள் உருவாக வேண்டும்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை க.பொ.த. (சா/த) பரீட்சை- 2018 பாடப் பெறுபேறுகள்- தமிழ்மொழிப்பிரிவு

| பாடமும் எண்ணும் | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி எண் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவம் 12 | 138 | 138 | 134 | 01 | 03 | -- | -- | 138 | 100 |
| கத்தோலிக்கம் 14 | 15 | 15 | 13 | 02 | -- | -- | -- | 15 | 100 |
| கிறிஸ்தவம் 15 | 05 | 05 | 05 | -- | -- | -- | -- | 05 | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் 22 | 158 | 158 | 139 | 18 | 01 | -- | -- | 158 | 100 |
| ஆங்கிலம் 31 | 158 | 158 | 78 | 43 | 25 | 11 | 01 | 157 | 99.37 |
| கணிதம் 32 | 158 | 158 | 123 | 17 | 15 | 03 | -- | 158 | 100 |
| வரலாறு 33 | 158 | 158 | 119 | 22 | 14 | 03 | -- | 158 | 100 |
| விஞ்ஞானம் 34 | 158 | 158 | 63 | 44 | 43 | 08 | -- | 158 | 100 |
| 1ஆவது பாடத் தொகுதி | | | | | | | | | |
| வர்த்தகமும் கணக்கியலும் 60 | 143 | 143 | 76 | 33 | 25 | 08 | 01 | 142 | 99.3 |
| புவியியல் 61 | 10 | 10 | 04 | 05 | 01 | -- | -- | 10 | 100 |
| குடியுரிமையும் ஆட்சியியலும் 62 | 05 | 05 | 03 | 01 | 01 | -- | -- | 05 | 100 |
| 2 ஆவது பாடத் தொகுதி | | | | | | | | | |
| கர்நாடக சங்கீதம் 42 | 25 | 25 | 23 | 02 | -- | -- | -- | 25 | 100 |
| சித்திரம் 43 | 06 | 06 | 02 | 02 | 02 | -- | -- | 06 | 100 |
| பரதநாட்டியம் 45 | 15 | 15 | 13 | 02 | --- | -- | -- | 15 | 100 |
| ஆங்கில இலக்கியம் 46 | 15 | 15 | 03 | 04 | 04 | 02 | 02 | 13 | 86.67 |
| தமிழ் இலக்கியம் 48 | 84 | 84 | 60 | 19 | 05 | -- | -- | 84 | 100 |
| நாடகமும் அரங்கியலும் 51 | 13 | 13 | 12 | 01 | -- | -- | -- | 13 | 100 |
| 3ஆவது பாடத்தொகுதி | | | | | | | | | |
| தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் 80 | 121 | 121 | 95 | 19 | 07 | -- | -- | 121 | 100 |
| விவசாயமும் உணவுத் தொழில் நுட்பமும் 81 | 35 | 35 | 24 | 09 | 02 | -- | --- | 35 | 100 |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கை யும் 87 | 02 | 02 | 01 | -- | 01 | -- | -- | 02 | 100 |

முதல் ஆறு பாடங்களும் சகலருக்கும் கட்டாயம். மூன்று விருப்பு பாடத்தொகுதிகளில் ஒவ்வொரு பாடம் எடுக்கவேண்டும்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை க.பொ.த. (சா/த) பரீட்சை- 2018 பாடப் பெறுபேறுகள்- இருமொழிப்பிரிவு

| பாடமும் எண்ணும் | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி எண் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவம் 12 | 65 | 65 | 63 | 02 | -- | -- | -- | 65 | 100 |
| கத்தோலிக்கம் 14 | 07 | 07 | 06 | 01 | -- | -- | -- | 07 | 100 |
| கிறிஸ்தவம் 15 | 01 | 01 | 01 | -- | -- | -- | -- | 01 | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் 22 | 73 | 73 | 66 | 06 | 01 | -- | -- | 73 | 100 |
| ஆங்கிலம் 31 | 73 | 73 | 69 | 04 | -- | -- | -- | 73 | 100 |
| கணிதம் 32 | 73 | 73 | 55 | 08 | 10 | -- | -- | 73 | 100 |
| வரலாறு 33 | 73 | 73 | 62 | 10 | 01 | -- | -- | 73 | 100 |
| விஞ்ஞானம் 34 | 73 | 73 | 37 | 15 | 19 | 02 | -- | 73 | 100 |
| 1ஆவது பாடத் தொகுதி | | | | | | | | | |
| வர்த்தகமும் கணக்கியலும் 60 | 67 | 67 | 42 | 14 | 10 | 01 | -- | 67 | 100 |
| புவியியல் 61 | 06 | 06 | 05 | 01 | --- | -- | | 06 | 100 |
| 2 ஆவது பாடத் தொகுதி | | | | | | | | | |
| கர்நாடக சங்கீதம் 42 | 10 | 10 | 10 | -- | -- | -- | -- | 10 | 100 |
| சித்திரம் 43 | 01 | 01 | -- | 01 | -- | -- | -- | 01 | 100 |
| பரதநாட்டியம் 45 | 51 | 51 | 13 | 17 | 20 | 01 | | 51 | 100 |
| ஆங்கில இலக்கியம் 46 | 09 | 09 | 06 | 02 | 01 | -- | | 09 | 100 |
| தமிழ் இலக்கியம் 48 | 02 | 02 | 02 | -- | -- | -- | -- | 02 | 100 |
| 3ஆவது பாடத் தொகுதி | | | | | | | -- | | |
| தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் 80 | 70 | 70 | 57 | 10 | 02 | -- | -- | 70 | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் 86 | 01 | 01 | 01 | -- | -- | -- | | 01 | 100 |
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் 87 | 02 | 02 | 01 | 01 | -- | -- | -- | 02 | 100 |

முதல் ஆறு பாடங்களும் சகலருக்கும் கட்டாயம். மூன்று விருப்பு பாடத்தொகுதிகளில் ஒவ்வொரு பாடம் எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதம் பிடித்தவர்களுக்கு மனிதர்களைப் பிடிக்காமல் போய்விட்டது

## புதிய யுத்தம்; மீண்டும் இரத்தம்



**“உயிர்த்தெழுந்தார் இயேசுநாதர் எனப் பாடிக் கொண்டு இருந்த எவரும் ‘இன்னும் சிறிது நேரத்தில், தன்னுடைய உயிரே பறிபோய்விடும்’ என்று நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். 350 இற்கும் மேற்பட்டோரின் உயிர்களை காவுகொண்ட கடந்த ஈஸ்டர் ஞாயிறு இலங்கையின்வரலாற்றில் இன்னுமொரு கறுப்பு ஞாயிறு ஆகிவிட்டது!”**

கிறிஸ்தவர்களின் முக்கியப் பண்டிகையான ஈஸ்டர் கொண்டாட்டத்தில், மூழ்கியிருந்தன இலங்கையின் தேவாலயங்கள். தலைநகர் கொழும்பின் முக்கிய இடமான கொச்சிக்கடை பகுதியில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு நடந்து கொண்டிருந்தது. திடீரென பெரும் வெடிச்சத்தம். சில விநாடிகளில் தேவாலயத்தின் கூரைகளும் சுவர்களும் மனிதச்சதைகளையும் இரத்தங்களையும் பூசிக்கொண்டன. என்ன நடந்தது என்று யாராலும் யோசிக்கக்கூட முடியவில்லை.

நீர்கொழும்பு செபஸ்தியார் தேவாலயம், கொழு ம்பின் அதிசொகுசான ஷங்ரிலா, கிங்ஸ்பரி, சினமன் கிராண்ட் என நட்சத்திர ஹோட்டல்கள், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் உள்ள சீயோன் தேவாலயம் என அடுத்தடுத்து குண்டுவெடிப்புகள் தொடர்ந்தன. பிற்பகல் 1.45 மணியளவில் தெகிவளை யில் உள்ள தேசிய உயிரியல் பூங்காவுக்கு அருகில் ஏழாவது குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இறுதியாக கொழும்பின் தெமத்தகொட பகுதியில் சந்தேகத்துக்கிடமான நபர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது அங்கும் வெடித்தது குண்டு. மூன்று பொலிஸார் உயிரிழந்தனர்.


நட்சத்திர ஹோட்டல்களின் வளாகங்கள் அம்புலன்ஸ் வண்டிகளின் பீதி ஒலியால் நிறைந்தன. இரத்தமும் சதையுமாக பலரையும் அள்ளிக் கொண்டு போனார்கள். கொழும்பு தேசிய வைத்திய சாலையின் தரை, இரத்தச் சகதியால் வழுக்கியது.

முதல் குண்டு வெடித்த ஷங்ரிலா ஹோட்டல், வெளிநாட்டவர்கள் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாக வந்து தங்கும் விடுதி. பணக்கார சுற்றுலாப் பயணிகளின் முதல் விருப்பம், இந்த ஹோட்டல் என்கிறார்கள் கொழும்பு பத்திரிகையாளர்கள்.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவரும் பிரிட்டனின் ஸ்கொட்லாண்டில் இரண்டாவது பெரும் தனியார் நில உடைமையாளருமான பொவ்ல்சின், அவருடைய மூன்று குழந்தைகளை இந்தக் குண்டுவெடிப்பில் இழந்துள்ளார். நான்கு பிள்ளைகளின் பெற்றோரான அவரும் அவரின் மனைவியும் உயிர் தப்பியுள்ளனர். இந்த தம்பதியருக்கு ஸ்கொட்லாந்தில் 11 எஸ்டேட்டுகள் உள்பட இரண்டு இலட்சத்து 21 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலம் உள்ளது.

ஷங்ரிலா ஹோட்டலில் தங்கியிருந்த பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி சரிட்டா மார்லுவும் அவரின் நண்பர்களும் குண்டுவெடிப்பிலிருந்து உயிர் தப்பினர். ஷங்ரிலா ஹோட்டலின் மூன் றாவது தளத்தில் உள்ள உணவகத்தில்தான் குண்டு வெடித்தது. இவர்கள் 17 ஆவது தளத்தில் தங்கியிருந் தார்கள். தூங்கிக்கொண்டிருந்த மூவரும் ஹோட்டலை விட்டு வெளியேறவேண்டும் என்ற அபாய அறிவிப்பு வந்ததை அடுத்து, கீழே ஓடியுள்ளனர்.

“படிகளில் இறங்கியபோது இரத்தமாக இருந்தது. ஹோட்டலைவிட்டு வெளியே வந்தபிறகுதான், பக்கத்தில் உள்ள ஹோட்டல்களிலும் தேவாலயங்களிலும் குண்டு வெடித்ததை அறிந்து, அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினோம் என்பதை உணர்ந்தோம். 12 மணிக்கு எல்லாருக்கும் உணவு தந்தார்கள். ஈஸ்டர் பண்டிகைக்காக எவ்வளவு அன்போடு இந்த உணவைத் தயாரித்திருப்பார்கள் என்று நினைத்தபோது எங்களுக்குள்



பெருகிய கண்ணீரைக் கட்டுப்படுத்தமுடியவில்லை” என்று உருகியுள்ளார் சர்ட்டா.

ஷங்ரிலா ஹோட்டலில் இரண்டு குண்டுகள் வெடித்துள்ளன. மனித வெடிகுண்டாக உயிரிழந்த இருவரும் இந்த ஹோட்டலின் 616 ஆம் அறையில்தான் தங்கியிருந்துள்ளனர். அங்கிருந்த கண்காணிப்பு கமராவின் மூலம் இது தெரியவந்துள்ளது. அவர்கள் 25 கிலோ எடையுள்ள சி-4 எனும் வெடிபொருளைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று அரசுத் தரப்பில் விசாரணை நடத்திய வெடிகுண்டு நிபுணர் முதல் கட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இலங்கை இராணுவம் போர்புரிந்தபோதுகூட அப்பாவி மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதில்லை. முள்ளிவாய்க்காலில் முடிந்த இனப்படுகொலையின் பத்தாம் ஆண்டு நினைவுகூரப்படவுள்ள நிலையில், அப்பாவி மக்கள்மீது கோரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சிறிது நேரத்தில் அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று பார்வையிட்டார். ‘இதை சகித்துக்கொள்ள முடியாது’ என்று ஆவேசப்பட்டார். இதற்கிடையில், இலங்கை அமைச்சர்கள் ஹரின் பெர்னாண்டோவும், மனோ கணேசனும் டுவிட்ட ரில் இந்தக் குண்டு வெடிப்பு குறித்து முன்பே தெரிந்தும் அரசு நடவடிக்கை எடுக்காமல் உதாசீனப்படுத்திவிட்டதாகக் குற்றம்சாட்டியிருந்தனர். இதன் உச்சக்கட்டமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தன் அமைச்சரவை சகாக்களின் கருத்துகளை ஆமோதித்ததுடன், முன்னெச்சரிக்கை வந்தும் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன் என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பின்பு, சகல திசைக ளிலிருந்தும் அரசாங்கத்துக்கு எதிராகக் கண்டனக் கணைகள் பறந்தன.

அமைச்சர்களின் கூற்றுப்படி, ஏப்ரல் 11 ஆம் திகதியிடப்பட்ட இரகசியத் தகவலானது, தேசிய புலனாய்வு அமைப்பிடமிருந்து இலங்கை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர், பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பான ஜனாதிபதி மைத்திரிக்கு அனுப்பிவைத்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

22 ஆம் திகதி ஊடகத்திடம் பேசிய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, பகிரங்கமாகவே பாது காப்புத் துறையைக் குறை கூறினார். தேசிய தௌஹீத் ஜமாத் எனும் உள்நாட்டு இஸ்லாமிய அடையாளத் தீவிரவாத அமைப்பே இதன் பின்னணியில் இருக்கிறது என்றும் பகிரங்கமாக அவர் குற்றம்சாட்டினார்.

ஏன் இந்தத் தாக்குதல்? கொழும்பு பத்திரிகையாளர் பாரதி ராஜநாயகம், “இந்திய புலனாய்வுத் துறை (றோ) ஏப்ரல் முதல் வாரத்திலேயே இலங் கையை எச்சரித்திருந்தும் ஏன் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுகிறது. இரண்டாவது, கிழக்கிலங்கையில் காத்தான்குடி பகுதியில் முஸ்லிம் தீவிரவாதிகள் சிலருடைய பயிற்சி முகாம்கள் இயங்கி வருவதாகத் தகவல்கள் வெளியான பின்னும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளது. அடிப்படைவாத அமைப்புகள் சிலவற்றின் கேந்திர நிலையமாக இலங்கை மாறி வருவது



குறித்து பல்வேறு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டும், அரசாங்கம் விழிப்பாக இருக்கவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவும் கூறியிருக்கின்றனர். ஆக, இந்தத் தாக்குதலுக்கு புலனாய்வுத்துறையின் பலவீனமே பிரதான காரணம். தேவாலயங்களும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுமே தாக்குதல் இலக்காக இருந்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் 35 இற்கும் மேற்பட்டவர்கள் வெளிநாட்டவர்கள். உல்லாசப் பயணத்துறையை முடக்குவதும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான நிலைப்பாடும் இந்தத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்திருக்கலாம்” என்கிறார். மதம் பிடித்தவர்களுக்கு மனிதர்களைப் பிடிக்காமல் போய்விட்டது என்பதுதான் வருத்தமளிக்கிறது.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய நன்மையை நாம் அடையாவிட்டாலும் பிற ருடைய நன்மை இருக்கவே இருக்கிறது. அதனைச் செய்ய முயல்வோம். – ஜோர்ஜ் எலியட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கூட்டமாகக் கூடுவதை தவிர்ப்பது நல்லது

கடந்த 21ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பரவலான குண்டுத் தாக்குதலில் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை 350ஐ கடந்து நிற்கிறது.

குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதோடு அதன் தாக்கம் முடிந்து விட்டது, நிலைமை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது என் றால் ஓரளவுக்கு ஆறுதலடைய முடியும்.

ஆனால் அதுதான் இல்லை. இன்னமும் குண்டுத் தாக்குதல் இடம்பெறலாம் என்ற எச்சரிக்கையை படைத்தரப்பும் இந்தியா மற் றும் அமெரிக்கா போன்ற நாடுகளும் விடுத்த வண்ணமுள்ளன.

இதற்கு மேலாக கொழும்பு மேற்றாணியர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் விடுத்த விசேட செய்தியில் தேவாலயங்களில் மக்கள் கூடுவதை இப்போதைக்கு தவிர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தவிர, பாடசாலைகளுக்கு விசேட விடு முறை வழங்கப்பட்டுள்ளது. குண்டுத் தாக்கு தலை நடத்துகின்றவர்கள் தேவாலயங்கள் மீதும் விடுதிகள், கடைகள் போன்ற இடங் களையும் இலக்கு வைத்துள்ளனர்.

இந்நிலையில் பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் குண்டுத்தாக்குதல்கள் இடம் பெறுமாக இருந்தால், இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அழுகுரலாகவே இருக்கும்.

எனவே நிலைமையை உணர்ந்து ஆபத்துக் களில் இருந்து தப்பித்துக் கொள்ளுதல், ஆபத் தைத் தவிர்த்தல் என்ற விடயத்தில் பொது மக்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அதேநேரம் வட மாகாணத்தைப் பொறுத்த வரை அதிலும் யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவதைக் காண முடிகின்றது.

நாட்டில் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங் கப்பட்டிருக்கின்ற வேளையில், தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவதும் ஒரு குறித்த நேரத்தில் ஐந்நூறு மாணவர்களுக்கு மேல் கல்வி கற்பதும் தங்கள் பிள்ளைகள் தனியார் கல்வி நிறுவனங்களில் இருக்க, அவர்களுக் காகக் பெற்றோர்கள தனியார் கல்வி நிறு வனங்களின் வாசல்களில் வாகனங்களுடன் காத்திருக்கின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

மாணவர்கள் கற்க வேண்டியது அவசிய மாயினும் உயிர்ப் பாதுகாப்பு என்பது எல்லாவற் றையும்விட முக்கியமானது என்ற அடிப்படை யில், தனியார் கல்வி நிறுவனங்களும் மாண வர்களின் பாதுகாப்பு விடயத்தில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

தேவையாயின் பாடசாலைகளுக்கான பாது காப்பு ஏற்பாடுகளை தனியார் கல்வி நிறு வனங்களும் பின்பற்றுதல் வேண்டும். எது எவ்வாறாயினும் பொதுமக்கள் கூடுவது, தனி யார் கல்வி நிறுவனங்கள் இயங்குவது, ஆல யத் திருவிழாக்களில் பெருமளவான பக்தர் கள் கலந்து கொள்வது ஆகிய விடயங்களில் உரிய அறிவித்தல்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன பற்றி சட்டரீதியான உத்தரவுகளை வழங்குவது குறித்து அரச நிர்வாகம் சிந்தித் தாக வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொது மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பது இன்றைய சூழலில் உத்தமமான காரியமாகும்.

# தேடப்பட்ட லொறி வத்தளையில் சிக்கியது

கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்டவரின் தக வலை அடுத்து வத்தளை, நாயகந்தயில் சந்தேகத்திற் கிடமான பாரவூர்தி ஒன்று பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெடிபொருட்கள் நிரப் பிய பாரவூர்தி மற்றும் மினி வான் என்பன கொழும்பு நகருக்குள் ஊடுருவி உள்ள தாக பொலிஸாரால் எச்சரி க்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பாரவூர்தி (WP DAE 4197)நேற்றுமாலை வத்தளையில் கைப்பற்றப் பட்டுள்ளது என பொலிஸ ஊட கப்பிரிவுதெரிவித்துள்ளது.(ம-3)

### யாழில் இரும்பு வியாபாரிகள்
# தமது தொழில்களை
## தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்

யாழ்ப்பாணத்தில் பழைய இரும்புகள், பிளாஸ் ரிக் பொருள்களை சேகரித்து வந்தவர்களும் நடைபாதை வியாபாரங்களில் ஈடுபட்ட வர்களும் தமது தொழில் களை தற்காலிகமாக நிறுத் தியுள்ளனர்.

குடாநாட்டு வீதிகளில் காலை வேளைகளில் வாக னங்களில் ஒலிபெருக்கி களை பொருத்தி" பழைய இரும்புகள், உடைந்த பிளா ஸ்ரிக் பொருள்கள் வாங்கப் படும்" என தொழில் நடவடிக கைகளில் ஈடுபடுபவர்கள் கடந்த நான்கு நாள்களாக தமது தொழில் நடவடிக்கை களை தற்காலிகமாக நிறுத்தி யுள்ளனர்.

அதேவேளை வீதியோ ரங்களில் நடைபாதை வியா பாரங்களில் ஈடுபடுவோர் களும், வாகனங்களில் வந்து அவற்றை வீதியோ ரங்களில் நிறுத்தி வைத்து, "கம்பளம் " உள்ளிட்ட துணி வகைகள் உடுபுடவை வியா பரத்தில் ஈடுபடும் வியாபாரி களும் தமது வியாபர நட வடிக்கைகளை தற்காலிக மாக நிறுத்தி வைத்துள்ள னர்.

இந்த வியாபார, தொழில நடவடிக்கைகளில் பெரும் பாலும் முஸ்லிம்களே ஈடு பட்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ம-3)

### யாழ்., மாநகரில் அமைந்துள்ள
## பள்ளிவாசல்களுக்கு வருவோரின் விபரம் சேகரிக்கும் பொலிஸார்

யாழ்ப்பாணம் மாநகரில் அமைந்துள்ள பள்ளிவாசல் களில் பொலிஸார் விபரங் களை சேகரித்து வருவதாக அவற்றின் நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

பள்ளிவாசல்களுக்கு வருகை தந்த பொலிஸார், பள்ளிவாசலுக்கு வருகை தருவோர் தொடர்பான விப ரங்களை வழங்குமாறு கோரியுள்ளதாக பள்ளி வாசல் நிர்வாகத்தினர் தெரி வித்தனர்.

இதேவேளை, யாழ்ப் பாணம் முஸ்லிம் தலைவர் களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெறவிருந்த நிலை யில் பொலிஸாரின் இந்த நடவடிக்கையால் அந்த சந்தி ப்பு ரத்துச்செய்யப்பட்டது.(ம-3)

# கிளிநொச்சியில் 6 பேர் இராணுவத்தினரால் கைது

கிளிநொச்சியில் நேற்று மாலை ஆறு மணியளவில் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கிளி நொச்சி பொலிஸ் நிலையத் தில் ஒப்படைக்கப்பட்டுள்ள னர்.

நாட்டில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங் களை அடுத்து நாடளாவிய ரீதியில் தேடுதல்களும் சந் தேகநபர்களும் கைது செய் யப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் புலனா ய்வுப் பிரிவினருக்கு கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலை யடுத்து இராணுவத்தினரால் மேற்படி ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வியாபார நிலையங் கள் நடத்திவரும் நான்கு பேரும், கிளிநொச்சி ஏ9 வீதி யில் தும்பினி விகாரைக்கு அருகில் ஒருவரும் கனகாம் பிகைகுளம் பிரதேசத்தை சேர்ந்த ஒருவரும் என ஆறு முஸ்லிம்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் களுக்கும்சிலமுஸ்லிம்அமைப் புகளுக்கும் இடையே தொடர புகள் காணப்படுவதாக தெரி வித்தே கைது செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (ம-312)

# யாழ். நீதிமன்ற வளாகத்துக்குள் கைப்பை எடுத்துவரத் தடை

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்குள் வரும் பொது மக்கள் கைப்பை (Hand Bag) உள்ளிட்ட பொதிகளை எடு த்து வருவதற்கு அனுமதிக் கப்படமாட்டார்கள் என்று நீதிமன்றப் பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்தக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை யடுத்து நாடுமுழுவதுமுள்ள அரச நிறுவனங்கள், வைத் தியசாலைகள் மற்றும் வங்கிகளில் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்ப் பாணம் நீதிமன்ற வளாகத் துக்குள்இந்த நடைமுறையை பொலிஸார் பின்பற்றத் தவறி யதால் நேற்று வியாழக் கிழமை நீதிமன்ற வழக் குக்கு வருகை தந்த ஒருவர் தான் எடுத்துவந்த கைப் பையை நீதிமன்ற வாயி லின் உள்புறத்தில் வைத்து விட்டு உள்ளே வந்துள்ளார்.

இதனால் நீதிமன்ற வளா கத்துக்குள் குழப்பநிலை ஏற்பட்டது. எனினும் கைப் பையை எடுத்து வந்தவர் பொலிஸாரிடம் தகுந்த கார ணத்தைக் கூறியதால் அவ ரிடம் கைப்பை வழங்கப்பட் டது.

இந்தச் சம்பவத்தை யடுத்தே யாழ்ப்பாணம் நீதி மன்ற வளாகத்துக்குள் கைப்பை உள்ளிட்ட பொதி களைஎடுத்துவர பொதுமக்கள அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று நீதிமன்றப் பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது. (ம-3)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### யாகம் (யக்ஞம்)

யாகம் ஆற்றலை உண்டாக்குகிறது. ஆற்றல் மெய்யு ணர்வையும விழிப்புணர்வையும (தெரிநிலை உணர்வு) உண்டாக்குகிறது. விழிப்புணர்வன உச்சநிலை மெய மைக்கு (Reality) நெருக்கமாக உன்னைக்கொண்டு வருகிறது. அந்த மெய்ம்மையே ஆன்மசாட்சி.

எல்லாம் நிகழ்வதை நீ உணர்வதற்கு எனக்கு விழிப்புணர்வு உச்ச நிலையில் தேவை.

உச்சநிலை விழிப்புணர்வைப் பெறுவதற்கு நீ உனது பிராண சக்தியை அதிகரித்துக்கொள்ளவேண்டும். பிராண சக்தியை அதிகரிக்கத் தேவையானவை:

1. விரதம் (உண்ணாநோன்பு) பழைய உணவைச் சாப்பிடாமல் இருத்தல்
2. பிராணாயாமங்கள், கிரியா, தியானம்
3. மௌனம்
4. குளிர்ந்த நீரில் நீராடல்
5. முழுவதுமாகப் பிராணசக்தியை பயன்படுத்தித் தீர்த்தல், உறக்கம் நம்மை ஆட்கொள்ளாமல் விழித்திருத்தல்
6. உணர்ச்சிகளின் உச்சநிலை
7. குருவின் சந்நிதியில் இருத்தல்
8. பாடல் ஜெபம்
9. நாம் தான் கொடுக்கிறோம் என்னாது கொடுத்தல், நாம்தான் சேவை செய்கிறோம் என்னாது சேவை செய்தல்

இவை யாவும் சேர்ந்து யாகமாகிறது.

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

பயனளிக்கும் அறிவின் வளர்ச்சியை பற்றிய சிந்தனை சிறிதேதுமில்லை. அதனை வளர்க்கும் குருநாதரைத் தேடுவதுமில்லை. வறிதே வாழ்நாள் கழிந்தால் பின்னர் மரணமென்ற வெள்ளம் வந்து விடுமே! அவ்வெள்ளம் வருமுன் அணைபோட வேண் டாமா? ஆகவே காலம் தாழ்த்தாமல் நாம் ஒவ்வொரு வரும் அறிவின் வளர்ச்சிக் காக அறிவு நூல்களைக் கற்றும் அறிவின் சிகரமாகிய ஆன்றோரையடுத்தும் அறிவின் வடிவமாகிய ஆண்ட வனை வேண்டியும் உய்வு பெறுவோமாக.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# மூல நட்சத்திர தோசத்தை போக்க எளிய பரிகாரம்

மூலம் நட்சத்திரம் 27 நட்சத்திரங்களில் பத்தொன்ப தாவது நட்சத்திரமாக மூலம நட்சத்திரம வருகிறது.

மூலம் நட்சத்திரம் "கேது" பகவானின் ஆதிக்கம் கொண்ட நட்சத்திரமாகும்.

மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்களின் நட்சத்திர தோஷத்தை போக்கவும், அதிகமான நன மைகளை பெறவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிகாரங் களை செய்தாலே போதும். தற்போது அந்த பரிகாரம் என்ன என்பதை பார்ப்போம்.

தினந்தோறும் காலையில், குளித்து முடித்ததும், விநாயக பெருமானை வழிபட்ட பின் மற்ற காரியங்களை செய்ய தொடங்குவது நன்மைகளை உண்டாக்கும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்களால முடிந்த போது அடர்பழுப்பு (பிரவுன்) நிற ஆடைகளை வசதியில்லாதவர்களுக்கு தானம் அளிப்பது மூல நட்சத்திர தோஷத்தை போக்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் எங்களை வெல்ல முடியுமா வெற்றியின் பின் ஹர்பஜன் சிங்



ஐபிஎல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஐதராபாத் அணியை வீழ்த்திய நிலையில், சென்னையில் எங்களை வீழ்த்த முடியுமா என்பது போல் ஹர்பஜன் சிங் சவால் விடுத்துள்ளார்.

சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த 23 ஆம் திகதி நடந்த ஐபிஎல் லீக் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியை வீழ்த்தியது.


இந்தப் போட்டியில் ஐதராபாத் அணியின் அதிரடி வீரர்களான பேர்ஸ்டோ, வோர்னர் ஆகியோரின் விக்கெட்களை ஹர்பஜன் சிங் வீழ்த்தினர். சென்னை அணியின் வெற்றிக்கு இது முக்கிய காரணமாக அமைந்தது.

இந்நிலையில் சென்னை அணியின் வெற்றி குறித்து ஹர்பஜன் சிங் கூறுகையில், 'களத்தில் இறங்குவது என்பதே மகிழ்ச்சி தருவது தான். எனக்கு உடல் நலம் குறைவு காரணமாக சில போட்டிகளில் ஆட முடியாமல் போனது துரதிர்ஷ்டம்.

ஆகவே மீண்டும் இறங்கி ஆடியது சந்தோஷமாக உள்ளது. அதிலும் வெற்றி கூடுதல் மகிழ்ச்சி தருகிறது. 19ஆவது ஓவரிலேயே ஆட்டத்தை வென்றிருப்போம். ஆனால் சிறிது நேரம் எங்கள் இதயங்களை சோதித்தனர். எப்படியோ கடைசி ஓவர் ஆட்டத்தை எடுத்துச் செல்வது ஒரு மனப்பாங்கு ஆகிவிட்டது. முடிவு நமக்கு சாதமாக அமையும் வரை இது சரி.

இந்த பிட்சை நாங்கள் நன்றாக அறிவோம். அருமையான ரசிகர்களுக்கு நன்றி. சென்னைக்கு வந்து எங்களுக்கு எதிராக ஆடும் எதிரணியினர் எங்களை வெல்ல வேண்டுமெனில், எங்களைக் காட்டிலும் சிறப்பான கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தினால் மட்டுமே முடியும், இல்லையெனில் கடினம்' என தெரிவித்துள்ளார். (க)

# பந்தை தொலைத்துவிட்டு மைதானத்தில் தேடிய நடுவர்




ரோயல் சலெஞ்சர் பெங்களூரு மற்றும் பஞ்சாப் அணிகளுக்கிடையேயான ஆட்டத்தின் போது பந்தை அம்பயர் தனது பொக்கெட்டில் வைத்துக்கொண்டு தேடிய நிகழ்வு பார்வையாளர்கள் மத்தியில் சிரிப்பலையை ஏற்படுத்தியது.

விறுவிறுப்பான ஆட்டத்தின் இடையே சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. திடீரென பந்தைக் காணவில்லை என்று கூறி அனைவரும் ஒரு சில நிமிடங்கள் தேடிக்கொண்டிருந்தனர். பின்னர் புதிதாக பந்து கொண்டு வரப்பட்டது. இதற்கு நடுவர் தான் காரணம் என்பது பின்பு கண்டறியப்பட்டது. உண்மையில், 14 ஓவரை வீசிய முருகன் அஷ்வின், ஓவர் முடிந்ததும் பந்தை நடுவர் கொடுத்துவிட்டுச் சென்றார். அவர், அதை மற்றொரு நடுவரான சம்சுதினிடம் கொடுத்து விட்டுச் சென்றார். இதையடுத்து, அடுத்த ஓவரை அங்கித் ராஜ்புத் பந்துவீச வந்தார். அப்போது, பந்து எங்கே என நடுவரிடம் கேட்க, அவர் பந்தை பொக்கெட்டில் வைத்ததை மறந்துவிட்டு, பந்தைக் காணவில்லை என்று வீரர்களுடன் சேர்ந்து தேடிக்கொண்டிருந்தார்.

இது அங்கிருந்தவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது.

இதனால், மைதானத்துக்கு வெளியில் இருந்து மாற்றாக பந்துகள் எடுத்துவரப்பட்டன. அப்போது தான், தனது பொக்கெட்டில் பந்து இருந்ததை நடுவர் உணர்ந்தார். இதையடுத்து, சிறிய தாமதத்துக்குப் பின்னர் போட்டி மீண்டும் தொடங்கியது.

இந்த சம்பவம் களத்தில் இருந்தவர்கள் மட்டுமல்லாது, வர்ணனையாளர்கள் இடையேயும் சிரிப்பலைகளை ஏற்படுத்தியது. (க)

# உலகக்கோப்பை நெருங்குகின்றது; முதுகுவலியும் கொஞ்சம் இருக்கிறது

## டோனி சுவாரஸ்யம்



உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நெருங்கும் வேளையில், தன்னுடைய முதுகுவலி குறித்து கவனம் கொள்ள வேண்டும் என்று டோனி தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல்.தொடரில் சென்னை அணித்தலைவர் டோனி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். அவரது தலைமையில் சென்னை அணி 11 போட்டிகளில் 8 வெற்றிகளை பெற்றுள்ளது.

மேலும் டோனி 10 போட்டிகளில் விளையாடி 314 ஓட்டங்களை குவித்துள்ளார். இரண்டு போட்டிகளில் களம் இறங்காமலேயே டோனி இத்தனை ஓட்டங்களை விளாசியுள்ளார். முதுகுவலி காரணமாக ஒரு போட்டியில் விளையாடாத டோனி, பெங்களூரு அணிக்கு எதிராக 48 பந்துகளில் 84 ஓட்டங்கள் விளாசி அசத்தினார்.


இந்நிலையில் தன்னுடைய முதுகுவலி குறித்து டோனி கூறுகையில், 'உலகக்கோப்பை நெருங்கும் வேளை. எனக்கு முதுகு வலி கொஞ்சம் இருக்கிறது. அது ஒன்றும் மோசமாக இல்லை. ஆனால் கவனித்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. ஏனெனில் அதுவும் முக்கியம்.


அப்படி எனக்கு முதுகு வலிப்பதாக தோன்றினால், கட்டாயம் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்வேன். ஆனால், தற்போதைய தருணத்தில் நீங்கள் கொஞ்சம் கவலையோடு சமாளிக்க வேண்டும்.

ஏனெனில், நீங்கள் முழு உடற்தகுதிக்காக காத்திருக்க வேண்டுமென்று நினைத்தால், ஒரு போட்டிக்கும் இன்னொரு போட்டிக்கும் நடுவில் 5 வருடம் இடைவெளி உருவாகிவிடும்' என தெரிவித்துள்ளார். (க)

# உலகக் கிண்ணத் தொடரில் ஐ.பி.எல்லில் அசத்தும்

## கெயில் – ரஸல்





உலகக்கோப்பை தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் 15 வீரர்கள் கொண்ட பட்டியல் வெளியாகியுள்ளது. இதில் கெயில், ரஸல் உள்ளிட்ட ஐபிஎல் வீரர்கள் சிலர் இடம் பெற்றுள்ளனர்.

உலகின் டொப் 10 கிரிக்கெட் அணிகள் மோதும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர், மே மாதம் 30 ஆம் திகதி இங்கிலாந்து நாட்டில் தொடங்க இருக்கிறது. உலகக்கோப்பை தொடர் தொடங்கும் ஒரு மாதத்துக்கு முன்னர், அணிகள் தங்களது 15 வீரர்கள் கொண்ட பட்டியலை அறிவிக்க வேண்டும். அதன்படி, உலகக் கோப்பை தொடருக்குத் தகுதி பெற்றுள்ள அணிகள், தங்களின் அணியை அறிவித்து வருகின்றன. தற்போது அறிவிக்கப்படும் அணிகளில், எதிர்வரும் மே 23 ஆம் திகதி வரை ஐசிசியின் அனுமதி இல்லாமலேயே மாற்றங்கள் செய்ய முடியும்.

இந்நிலையில், உலகக் கோப்பை தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹோல்டர் தலைமையில் களமிறங்கும் அணியில், நடப்பு ஐபிஎல் தொடரில் மாஸ் காட்டிவரும் ரஸல் மற்றும் கெயில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில், ரஸல் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கான ஒரே ஒருநாள் போட்டியில் மட்டுமே விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் மாஸ் காட்டிய கெயில், அணியில் இடம்பிடித்துள்ளார். இந்த உலகக்கோப்பை தொடருடன் அவர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற உள்ளதாக அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மைதானத்தில் கெட்டவார்த்தை பேசிய ராகுல் மீது விமர்சனம்



42வது லீக் ஐபிஎல் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கோலி தலைமையிலான பெங்களூர் அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் பெங்களூர் அணியில் ஏழு பந்துவீச்சாளர்களை சுழற்சி முறையில் கோலி பயன்படுத்தியதால், யாருடைய ஓவர்களில் அடித்து ஆடலாம் என பஞ்சாப் அணி வீரர்கள் திட்டமிட முடியாத வகையில் குழம்பியதால் அதனை சாதகமாக வைத்து பெங்களூர் அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தின் போது பஞ்சாப் அணி வீரர் ராகுல் மைக்கில் கெட்ட வார்த்தை பேசியுள்ளார். வர்ணனையாளருடன் இணைந்து பேசிக்கொண்டிருந்த ராகுல், எதிரணியான பெங்களூர் வீரர் பார்த்திவ் படேல், பவுண்ட்ரி அடித்ததை பார்த்து உணர்ச்சி வசப்பட்டு கெட்ட வார்த்தை பேசியுள்ளார். சுமார், 20 நிமிடம் கழித்து தான் அவர் தான் கெட்ட வார்த்தை பேசியதை உணர்ந்துள்ளார்.

ரசிகர்கள் மட்டுமல்லாமல் குழந்தைகளுடன் அமர்ந்து குடும்பத்தினர் ஐபிஎல் போட்டியை ரசித்துக்கொண்டிருக்கையில் இப்படி வார்த்தையை பயன்படுத்தலாமா என விமர்சனம் எழுந்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்புச்...

மாலை 6 மணிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் அவர் தனது பதவி விலகலை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களில் 359 பேர் வரை உயிரிழந்தனர். தாக்குதல்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலரும் பொலிஸ் மா அதிபரும் பொறுப்புக் கூறவேண்டும் என்று ஆளும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் பொலிஸ் மா அதிபர் இருவரும் பதவி விலகல் கடிதத்தை வழங்க வேண்டும் என 24 மணிநேர காலக்கெடுவை ஜனாதிபதி வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் பயங்கரவாத தாக்குதல்களைத் தடுக்காமல் கடமையைத் தவறியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளார். (ம-3)

## சோதனை நட...

இந்த வெடிப்பு சம்பவம் நேற்று வியாழக்கிழமை மு.ப 9.30 மணியளவில் இடம்பெற்றது.

வெடிப்பினால் எந்தவொரு நபருக்கோ அல்லது சொத்துகளுக்கோ சேதம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிப்பிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பாதுகாப்பு பிரிவினர் முழுமையான விசாரணைகளை தற்போது ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட பல பகுதிகளில் தற்போது பெரும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு, நீர்கொழும்பு, மாவனெல்ல, பதுளை உள்ளிட்ட மேலும் பல முக்கிய நகரங்களில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

குறிப்பாக வீடுகள், கட்டடங்கள், பொது போக்குவரத்து சேவைகளிலிருந்து மக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டு, இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு முன்னெடுக்கப்படுகின்ற சோதனை நடவடிக்கைகளினால் மக்கள் பதற்றமடைய வேண்டிய தேவை கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தற்கொலைத் தாக்கு...

பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட் சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் நடந்த விதம், அதற்காக குண்டுதாரிகள் ஒன்றுசேர்ந்த விதம், அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிந்தோர் என அனைவர் தொடர்பிலும் தகவல்களை வெளிப்படுத்திக் கொண்டுள்ளதாகவும் அதன்படி அவர்களில் பலரைக கைது செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்கொலை குண்டுதாரிகள் மறைந்திருக்க பயன்படுத்திய 5 பாதுகாப்பு இல்லங்களையும் சி.ஐ.டி.யினர் கண்டுபிடித்துள்ளனர். பாணந்துறை - சரிக்காமுல்ல, தெஹிவளை, கொள்ளுப்பிட்டி, வத்தளை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் இந்த வீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாடளாவிய ரீதியில், முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட நடவடிக்கைகளில் இதுவரை குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையதாக கூறப்படும் 78 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பிரதான விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவில் நான்கு பெண்கள் உள்ளிட்ட 33 பேரையும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவு ஒரு பெண் உள்ளிட்ட நால்வரையும் கைதுசெய்து தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3,10)

## நாடு முழுவதும்...

முன்னெடுக்க இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி முற்பகல் 9 மணி தொடக்கம் மு.ப. 11.15 மணிவரையில் அல்லது மு.ப. 11.15 மணியிலிருந்து பி.ப. 1.30 மணி வரையும் அல்லது பி.ப. 1.30 மணி தொடக்கம் பி.ப. 3.45 மணிவரையும் அல்லது பி.ப. 3.45 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை சுழற்சிமுறையில் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படும் என்று மின்சார சபையால் முன் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## 139 பேர் அடை...

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடு முழுவதும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக இன்ற முதல், பாதுகாப்பு அமைச்சில், ஒருங்கிணைந்த செயற்பாட்டு மையம் ஒன்று இயங்கும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

## உயிரிழந்தோர்...

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்ட 359 பேர் கொல்லப்பட்டனர் என்ற தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மறுத்துள்ளார்.

அத்துடன், தாக்குதல்களில் 500 பேர் வரை படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 39 நாடுகளுக்...

நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 39 நாடுகளின் பிரஜைகளுக்கு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து இலங்கைக்கு வருகை தருவதற்கான விசா வழங்கும் விசேட திட்டத்திற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டிருந்தது.

எனினும் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை அடுத்து, பாதுகாப்புக் காரணிகளைக் கருத்திற்கொண்டு மறுஅறிவித்தல் வரை இத்திட்டத்தை நிறுத்தி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 39 நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளுக்கு இலங்கைக்கான விசா வழங்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற நிலையில், நாட்டின் நிலையைக் கருத்திற்கொண்டு அதனைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கத் தீர்மானித்திருக்கின்றோம். தொடர் குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் குறித்து காணப்படும் வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றியும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், இந்த விசா வழங்கும் திட்டத்தினால் விசாரணைகளில் பாதிப்பு ஏற்படக்கூடாது.

எனவே இத்தகைய தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியிருக்கின்றார்.

இந்த விசா வழங்கும் திட்டம் மே மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும் நோக்கில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-3)

## வவுனியா நகர...

துள்ளனர்.

நேற்று மதியம் 1.10 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா நகரசபைக்கு சொந்தமான, யாழ் வீதி, சோயா லேன் பகுதியில் உள்ள மாடு வெட்டும் கொள்களத்தின் கழிவுகள் வெளியேற்றும் பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்தபோது மாட்டு இரத்தம் உள்ளிட்ட கழிவுகள் காணப்பட்ட குறித்த 20 அடி ஆழமான குழிக்குள் இருந்து மீதேன் வாயு தாக்கம் ஏற்பட்டமையால் சுத்திகரிப்பு செய்த ஒருவர் மயங்கி குழிக்குள் விழுந்துள்ளார். இவரைக் காப்பாற்றுவதற்கு குழிக்குள் இறங்கிய மூவரும் வாயு தாக்கத்தினால் குழிக்குள் விழுந்து மரணமடைந்துள்ளனர்.

பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்ட குறித்த குழிக்குள் இருந்து ஏற்பட்ட வாயு தாக்கத்தினாலேயே குறித்த நால்வரும் 3 அடி ஆழத்திற்கு காணப்பட்ட கழிவுக்குள் விழுந்து மரணமடைந்தனர்.

இவ்வாறு மரணமடைந்த நால்வரும் வவுனியா நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்களாவர்.

நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்களான செல்வராஜா, வசந்தகுமார், சசிதரன், சந்தனசாமி ஆகிய இளம் குடும்பஸ்தர்களே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர். (ம-3,10,250)

## புனிதத் தலங்கள்...

எனவே குறித்த இடங்களை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

குறிப்பாக இன்று 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையிலான பகுதியில் அதிக சனங்கள் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் இலங்கை அதிகாரிகள் எச்சரித்துள்ளதாக அமெரிக்க தூதரகம் தமது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

### சிறுப்பிட்டியில் இளைஞர் இருவர் படுகொலை

# இராணுவத்தினர் ஐவர் மீது மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

சிறுப்பிட்டி இளைஞர்கள் இருவர் இராணுவ முகாமுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவத்தினர் ஐவருக்கும் எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் பரிந்துரைத்தது.

"வழக்கின் எதிரிகள் ஐவருக்கும் எதிராக சுருக்கமுறையற்ற விசாரணையில் முன்வைக்கப்பட்ட சாட்சிகளில் நீதிமன்று திருப்தியடைகின்றது. அதனால் எதிரிகளுக்கு எதிரான ஆள்கடத்தல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய மன்று கட்டளையிடுகின்றது.

சுருக்கமுறையற்ற விசாரணைகளின் வழக்கேடு மற்றும் வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருட்கள் இருப்பின் அவற்றையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பாரப்படுத்தவும் மன்று உத்தரவிடுகின்றது.

மேல் நீதிமன்றில் எதிரிகள் ஐவருக்கு எதிராகவும் உரிய குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு மன்று பரிந்துரைக்கின்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலிருந்து அழைப்புக் கட்டளை வரும் போது எதிரிகள் ஐவரும் அந்த மன்றில் முற்படவேண்டும். அதுவரை எதிரிகளுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் ஏற்கெனவே வழங்கப்பட்ட பிணையில் இந்த மன்று அவர்களை விடுவிக்கின்றது" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனிசாமி பீற்றர் போல் சுருக்கமுறையற்ற விசாரணையின் கட்டளையை வழங்கினார்.

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில் இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினரின் வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணையின் இறுதிக் கட்டளைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது மன்றில் சந்தேகநபர்களான 5 இராணுவத்தினரும் முன்னிலையாகினர். வழக்கின் 3ஆவது சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் உயிரிழந்துவிட்டார்.

**பின்னணி**

1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதி இளைஞர்கள் இருவர் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இதனுடன் தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரை அச்சுவேலி பொலிஸார் கைது செய்தனர். எனினும் 1998ஆம் ஆண்டு நீதிவான் நீதிமன்றம் குறித்த நபர்களுக்கு பிணை வழங்கியது. இதனைத் தொடர்ந்து கிடப்பில் போடப்பட்ட வழக்கு 2016ஆம் ஆண்டு சட்டமா அதிபரால் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் போரில் உயிரிழந்தனர். இந்த நிலையில் 14 இராணுவத்தினர் யாழ்ப்பாணம், நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். எனினும் அவர்களில் 9 பேரை வழக்கிலிருந்து விடுவிக்க சட்ட மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார்.

ஏனைய 5 சந்தேகநபர்களுக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது. இந்தச் சம்பவம் தொடர்பில் 1997ஆம் ஆண்டே விசாரணைகளை மேற்கொண்டிருந்த இராணுவப் பொலிஸார், கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் சங்கிலி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றை முகாமுக்குள் இருந்து மீட்டிருந்தனர்.

இதேவேளை, இந்த வழக்கின் சுருக்கமுறையற்ற விசாரணையின்போது, "சிறுப்பிட்டி படை முகாமுக்குள் இளைஞர்கள் இருவரையும் இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். அதனை என் கண்களால் கண்டேன். சிறிது நேரம் அந்த இடத்தில் நின்று பார்த்தேன். எனினும் இளைஞர்கள் இருவரும் வெளியே வரவில்லை" என்று பெண் ஒருவர் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் சாட்சியமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

விற்பனைக்கு
45 நாட்கள் நிறைவுற்ற தடுப்பூசி போடப்பட்ட பூச்சி நீக்கி கொடுக்கப்பட்ட அல்சேசன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (C-6213)
தொடர்பு
077 602 8734

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1540 திகதி 2019/04/25
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 20 27 54 69
0157576
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 2100
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 54 66 73 79
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/04/25
சீட்டிழுப்பு இலக்கம் 3903
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 5 4 4 9 9
தேசிய லொத்தர் சபை

நீரோகா லக்ன ஜய
திகதி 2019/04/25
சீட்டிழுப்பு இலக்கம் 538
லக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 14 39 61 72
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS (C-6164)

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## பணிநிலை வேண்டுகை

திருநெல்வேலியில் இயங்கும் போட்டோ கொப்பி பிரதிசெய்யும் நிறுவனத்திற்கு போட்டோ கொப்பி பிரதி செய்யக்கூடிய அல்லது பயிலுநர்களும், தட்டச்சு செய்யக் கூடிய வேலையாட்களும் தேவை.

தொடர்பு : 077 272 8336 (8577)







வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8572)



## Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

### A/L தொழில்நுட்ப பிரிவு

எமது கல்வி நடவடிக்கைகள் யாவும் நாளை சனிக்கிழமை (27.04.2019) வழமைபோல் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 0770175346, 0771703549


## குண்டுத் தாக்குதல்...

எம் கண்டால் 0718591771, 011 2422176 மற்றும் 0112395605 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு பொலிஸ் தலைமையகம் கேட்டுக் கொண்டுள்ளது.

மொஹமட் இயுஹைம் சாஹிட் அப்துல்லாஹ், நோத்சார எனப்படும் புலஸ்தினி ராஜேந்திரன், அப்துல் காதர் பாத்திமா காதியா, மொஹமட் மொஹட்ரில்வான் மற்றும் பாதிமா லதீபா உள்ளிட்ட ஆறு பேரின் புகைப்படங்களையே பொலிஸ் தலைமையகம் இவ்வாறு வெளியிட்டுள்ளது.

இதில் மூன்று பெண்களும், மூன்று ஆண்களும் உள்ள டங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


## தவறிவிட்டது

குமாரசாமி ஜெகதீஸ்வரன் ஆகிய நான் புதுக்குடியிருப்பு பிரதேச சபை சுகாதார தொண்டராக பணியாற்றுகிறேன். எனது தேசிய அடையாள அட்டை, முகாம் அ.அட்டை, வங்கி அட்டை அடங்கிய கைபேஸ் கடந்த 17.04.2019 புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அண்மையாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து தவுமாறு கேட்டுக்கொள்கிறேன். (C-6209)

9ஆம் வட்டாரம், மல்லிகைத் தீவு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. 077 062 8784



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532



## மருந்தாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் மருந்தகம் ஒன்றிற்கு மருந்தாளர் தேவை. எதிர்பார்க்கும் வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 927 9382, 077 555 0309 (8575)



## கட்டடம் வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஆறுகால்மடம் பிரதான வீதியருகே வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய களஞ்சியமாகவும், கடையாகவும் பாவிக்கக்கூடிய கட்டடம் (70 அடி நீளம், 30 அடி அகலம்) ஒன்றும் எதிரே கடையாக பாவிக்கக் கூடிய கட்டிடம் ஒன்றும் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 283 5005, 076 085 5501 (8582)


## யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட வட்டாரங்களின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்ட ஆவணம் தயாரித்தல் தொடர்பான கூட்டம்

08ஆம் வட்டாரம் - (கந்தர்மடம் தெற்கு) J/104, J/105 - வரதராஜன் பார்த்திபன்
இடம் :- ஸ்ரீவீரமாகாளி அம்மன் ஆலய மண்டபம்
காலம் :- 26.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணி

09ஆம் வட்டாரம் - (ஐயனார் கோவிலடி) J/97, J/101 - சிவகாந்தன் தனுஜன்
இடம் :- கிராம சேவையாளர் அலுவலகம் J/97
காலம் :- 26.04.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி


15ஆம் வட்டாரம் - (ஐயனார் கோவிலடி) J/78, J/79 - திரு மகேந்திரன் மயூரன்
இடம் :- கணபதி கலாசார மண்டபம் அத்தியடி
காலம் :- 26.04.2019 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி (8576)

மக்கள் தமது வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளை வெளிப்படுத்தும் தயார்படுத்தலுடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வரதராஜன் பார்த்திபன் சிவகாந்தன் தனுஜன் மகேந்திரன் மயூரன்

# மரண அறிவித்தல்கள்

தோற்றம் 22 . 06 . 1946



மறைவு 25 . 04 . 2019

## திருமதி விக்னேஸ்வரி வாசேஸ்பதிராஜா

லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி வாசேஸ்பதிராஜா நேற்று (25.04.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வாசேஸ்பதிராஜா அவர்களின் பாசமிகு மனைவியும், தனேஸ்வரி (ஆசிரியர் - ராசிக்பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு), கணேஸ்வரன் (உப பீடாதிபதி - தர்காநகர் தேசிய கல்வியற் கல்லூரி), லோகேஸ்வரி (ஆசிரியர் - வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம்), லோகேஸ்வரன் (ஆசிரியர் - சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), ஜெகதீஸ்வரன், கமலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நேசகுமாரன், வளர்மதி, மகேந்திரன், சதாங்கினி (முகாமைத்துவ உதவியாளர் - கரைச்சி பிரதேச சபை), அபிராமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீஹரிஸ், சபரீசன், தருணன், தருண்ஜா, தஷாயினி, ஆருக்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

லோட்டஸ் றோட், வண்ணார்பண்ணை. (8583)

லோகேஸ்வரன் - 0779590065, கணேஸ்வரன் - 0776669987

## அருணாசலம் லோகநாதன்



காரைநகர் சக்கலாவோடை குமிழங்குழியைப் பிறப்பிடமாகவும் புதுமுறிப்பு, உருத்திரபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் லோகநாதன் அவர்கள் 25.04.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், மோகனாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முருகேசு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (மலேசியா), காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் மீனாட்சி (லண்டன்) காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (7ஆம் வாய்க்கால், கிளிநொச்சி) மற்றும் லோகாம்பிகை (வவுனியா), அம்பலவாணர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற ஆறுமுகசாமி மற்றும் விவேகானந்தன் (டாம்பிகா), சிவாயநம (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2019) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் புதுமுறிப்பு, கிளிநொச்சியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புதுமுறிப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுமுறிப்பு, கிளிநொச்சி.

தகவல் : மனைவி லோ.மோகனாம்பிகை 077 173 5859, 077 202 1635 (C-6211)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org